Registered as a Newspaper பக்கங்கள் 06 விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 05 திருவள்ளுவர் ஆண்டு 2025 பங்குனி 20 (2.4.94) சனிக்கிழமை ஓசை 43

## வடக்கு-கிழக்கு நீங்கலாக மக்கள் தொகை கணக்கெடுப்பு

மக்கள் தொகைக் கணக்கெடுப்பை வடக்கு-கிழக்கு மாகாணத்தைத் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் எடுக்க புள்ளிவிபரத் திணைக்களம் முடிவு செய்துள்ளது. அதிகாரப் பரவலாக்கல் நடைமுறையின் கீழ் புதிதாக அமைக்கப்பட்ட பிரதேச செயலக மட்டத்தில் தரவுகளைச் சேகரிக்கும் நோக்கத்துடனேயே மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடைபெறவுள்ளது. வரும் செப்டெம்பரில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடைபெறவுள்ளது. சென்ற வரவு செலவுத் திட்டத்தில் இதற்கென 12 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டது. கணக்கெடுப்புக்கான கேள்விக் கொத்தையும் புள்ளி விபரத் திணைக்களம் தயாரித்துள்ளது.

(6ஆம் பக்கம் பார்க்க)

## மானமற்ற தமிழர்களே இன்று ஐ. தே. கவை ஆதரித்து நிற்பவர்

-குமார் பொன்னம்பலம்

(கொழும்பு)

தமிழ் அரசியல் கைதிகள் இலங்கையின் பிரதான சிறைக் கூடமான வெலிக்கடையில் வைத்து தனி அறைகளில் அடைத்து வைக்கப்பட்டிருந்த போது பட்டப்பகலில் அடித்துக் கொல்லப்பட்டனர். இந்த காட்டுமிராண்டிச் சம்பவம் உலகில் முதன் முதலாக இலங்கையில் நடைபெற்றுள்ளது. இதை மறந்தவர்களே மானமின்றி இன்று ஐ. தே. கவை ஆதரிக்கும் தமிழர்களாவர். இவ்வாறு குமார் பொன்னம்பலம் ஐலண்ட் பத்திரிகையில் எழுதிய கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களிடையே உள்ள ஐந்து தமிழ்க் குழுக்களும் அரச படைகளுடன் இணைந்து தமிழர்களுக்கு எதிரான யுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். இச்செயல்களுக்காக என்றோ ஒருநாள் அவர்கள் தமிழ் மக்களுக்கு பதில் சொல்லியே ஆகவேண்டும். விடுதலைப் புலிகள் ஒரு கொள்கைக்காக போராடுகின்றனர், இரத்தம் சிந்துகின்றனர், தியாகம் செய்கின்றனர். இவர்களை வெல்லலாம் என அரசு கனவு கூடக் காணமுடியாது என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வில் அரசாங்கம் உறுதியாய் உள்ளது

### அமெரிக்க அமைச்சரிடம் அமரதுங்க உறுதி

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதில் உறுதியாக இருப்பதாக அமெரிக்க உதவி வெளிவிவகார அமைச்சர் திருமதி றொபின்டன் ராபெலிடம் வெளியுறவு இணை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா அரசு வடக்கு கிழக்கு பிரச்சனைக்கு அரசியல் தீர்வு ஒன்றை காண்பதிலும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் இடம் பெறாமல் பார்த்துக் கொள்வதிலும் உறுதியாக உள்ளது என சிறிலங்காவின் வெளியுறவு இணை அமைச்சர் அமரதுங்க தெரிவித்தார்.

நேற்றுக்காலை வெளிவிவகார அமைச்சகத்தில் அமெரிக்க உதவி அமைச்சர் ராபெல் அமைச்சர் ஜோன் அமரதுங்கவை சந்தித்தார். இச் சந்திப்பின்போது இரு நாடுகளினதும் வெளிவிவகார அதிகாரிகள் கலந்து கொண்டனர். திருமதி ராபெல், வடக்கு - கிழக்கு பிரச்சினை தொடர்பாகவும் சிறிலங்காவில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும் இச் சந்திப்பின்போது கவலை தெரிவித்தார். இது

(6ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவத் தீர்வென முடிவு செய்துவிட்டோம்

# சமாதான முயற்சிகள் தேவையற்றவை

## மனைவிக்குவீசிய கத்தி; குழந்தை பலியானது

(வடமராட்சி)

மனைவியை வெட்டுவதற்காக வீசிய கத்தி அவரது கைக் குழந்தையை பலியாக்கியது. இச் சம்பவம் நேற்றுமுன்தினம் கரவெட்டிப் பகுதியில் நடைபெற்றது.

இதுபற்றி மேலும் தெரியவருகையில், மனைவிக்கும், கணவனுக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தகராறே இறுதியில் கத்தி வெட்டில் முடிந்தது. கணவன் தனது மனைவிக்கு

## அரசசார்பற்ற நிறுவனத்திடம் ஹமில்டன் வணசிங்கா தெரிவிப்பு

(கொழும்பு)

"வட - கிழக்கு பிரச்சினைக்கு இராணுவ நடவடிக்கை மூலமே தீர்வு காணுவது என்று நாம் முடிவு செய்துவிட்டோம். நீங்கள் சமாதான முயற்சிகள் குறித்துக் கவலைப்பட வேண்டாம்" இவ்வாறு சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திரு. ஹமில்டன் வணசிங்கா தெரிவித்தார்.

## ஒருதொகுதி அகதிகள் நேற்று யாழ். வருகை

(யாழ்ப்பாணம்)

தமிழகத்திலிருந்து திரும்பி வந்து வவுனியா ஆசிகுளம் அகதிமுகாமில் தங்கியிருந்த அகதிகளில் மேலும் ஒரு தொகுதியினர் 'மஹோ' கப்பல் மூலம் நேற்றுக் காலை பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்தனர்.

1990ஆம் ஆண்டு நடுப்பகுதியில் ஆரம்பமான இரண்டாம் கட்ட ஈழப்போரை அடுத்து தமிழகம் சென்ற இந்த அகதி மக்கள் 92-93-ம் ஆண்டு காலப் பகுதியில் கப்பல் மூலம் திருக்கோணமலை வந்து சேர்ந்து வடபகுதி வந்தடையும் நோக்கில் வவுனியா ஆசிகுளம் அகதி முகாமில் தங்கியிருந்தனர்.

யாழ் குடாநாட்டை

(வடமராட்சி)

மனைவியை வெட்டுவதற்காக வீசிய கத்தி அவரது கைக் குழந்தையை பலியாக்கியது. இச் சம்பவம் நேற்றுமுன்தினம் கரவெட்டிப் பகுதியில் நடைபெற்றது.

இதுபற்றி மேலும் தெரியவருகையில், மனைவிக்கும், கணவனுக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தகராறே இறுதியில் கத்தி வெட்டில் முடிந்தது. கணவன் தனது மனைவிக்கு கத்தியால் வெட்ட எத்தனித்த போது மனைவியின் கையில் இருந்த தனது குழந்தையை அவர்நீட்டிய போது குழந்தை மீதுகத்தி வீசப்பட்டு குழந்தை பலியானது. (யோ)

## "உலக தரிசனம்" அதிகாரி யாழ். வருகிறார்

(யாழ்ப்பாணம்)

உலக தரிசன நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம்செய்ய உள்ளார்.

மேற்படி நிறுவனத்தின் நிவாரண புனர்வாழ்வு முகாமையாளரான திரு. அன்று சுந்தர்சிங் என்ற அதிகாரியே நாளை மறுதினம் யாழ்ப்பாணம் வந்து சேருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குடாநாட்டில் மேற்படி நிறுவனத்தினூடாக மேற்கொள்வதற்குச் சாத்தியமான நிவாரண புனர்வாழ்வுத்திட்டங்கள் குறித்து ஆராய்வதற்கே இவர் யாழ்ப்பாணம் வருகிறார் எனத் தெரியவருகின்றது.

## நரோமா பயணிகள் மீது 10 மணிநேர சோதனை

(வடமராட்சி)

காங்கேசன்துறை கடற்படையினர் 'நரோமா' பயணிகள் கப்பலில் கடந்த செவ்வாய்க்கிழமை காங்கேசன்துறைக்கு வந்த பயணிகள் மீது மேற்கொண்ட சோதனை மனித உரிமை மீறலுக்கு ஒப்பானது என பயணி ஒருவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கும் போது, திருகோணமலையில் கடற்படையினர் சோதனை செய்தடையடுத்து நேராக காங்கேசன்துறைக்கு வந்த போதிலும் மேலும் பத்து மணித்தியாலங்கள் சோதனை நடைபெற்றமை பயணிகளுக்கு வியப்பை உண்டு பண்ணியது.

கொழும்பு கூட்டுப்படைத் தலைமை அலுவலரிடம் அனுமதி பெற்று எடுத்து வந்த மருந்துப் பொருள்கள் உட்பட அனைத்து பொருள்களையும்

(6ஆம் பக்கம் பார்க்க)

மதவிதுறக்க வேண்டுமென

## அஷ்ரப்பிடம் ரணில் கோரிக்கை விடுத்தாராம்

(கொழும்பு)

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் எம். எச். எம். அஷ்ரப்பிடம் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை துறக்க வேண்டாம் என்று சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த திங்களன்று மாலை பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான அலரி மாளிகைக்கு அஷ்ரப்பை அழைத்துப் பேச்சுநடத்திய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறுகையில், நான்கு ஆண்டுகளாக அஷ்ரப் பாராளுமன்ற விவாதங்களில் பங்கேற்று ஆக்கபூர்வமான பங்களிப்பு நல்கியதாகவும் அது மேலும் தொடரவேண்டும் என்றும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

(கொழும்பு)

"வட-கிழக்கு பிரச்சினைக்கு இராணுவ நடவடிக்கை மூலமே தீர்வு காணுவது என்று நாம் முடிவு செய்துவிட்டோம் நீங்கள் சமாதான முயற்சிகள் குறித்துக் கவலைப்பட வேண்டாம்" இவ்வாறு சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திரு. ஹமில்டன் வணசிங்கா தெரிவித்தார்.

சர்வதேச அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றின் அதிகாரிகள் குழுவினர் கடந்தவாரம் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திரு ஹமில்டன் வணசிங்காவைச் சந்தித்தனர். இச்சந்திப்பின்போது வடக்கு, கிழக்குப் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண்பது குறித்தும் அதற்கான சகஜநிலையை உருவாக்குவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது சமாதானத்துக்கான சகஜநிலையை உருவாக்கும் முயற்சியில் தாம் ஈடுபடுவதற்கு விரும்புவதாகவும் இதற்கு அரசின் ஒத்துழைப்புத் தேவை எனவும் மேற்படி அரசசார்பற்ற நிறுவன அதிகாரிகள் திரு ஹமில்டன் வணசிங்காவிடம் கோரிக்கை விடுத்தனர் இச்சந்தர்ப்பத்திலேயே திரு ஹமில்டன் வணசிங்கா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து இந்த அரசசார்பற்ற நிறுவனம் தனது சமாதான முயற்சிக்கான நடவடிக்கைகளை முற்றாகக் கைவிட்டுள்ளதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்

(6ஆம் பக்கம் பார்க்க)

# முஸ்லிம் காங்கிரஸ் மாநாட்டிற்கு ஜனாதிபதிக்கு அழைப்பில்லை

(கொழும்பு)

முஸ்லிம் காங்கிரஸ் கட்சி இன்று கல்முனையில் நடத்தும் அதனது பன்னிரண்டாவது தேசிய மாநாட்டில் கலந்து கொள்ளும்படி ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவிற்கு அழைப்பு அனுப்பப்படவில்லை.

இது தொடர்பாக காங்கிரஸ் வட்டாரங்கள் கருத்து தெரிவிக்கையில் ஜனாதிபதியின் அண்மைக்கால பேச்சுகள் சிறுபான்மையினரைக் குறிப்பாக முஸ்லிம்களை பெரிதும் புண்படுத்துவதாக அமைந்து வந்துள்ளது என்றும், அதனாலேயே அவருக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை என்றும் கூறின.

கடந்த காலங்களில் முஸ்லிம் காங்கிரஸ் தனது தேசிய மாநாட்டின் சிறப்பு விருந்தினராக நாட்டின் தலைவரான ஜனாதிபதியையும், விசேட விருந்தினர்களாக ஏனைய அரசியல் கட்சித் தலைவர்களையும் அழைப்பதை ஒரு மரபாகக் கொண்டிருந்தது.

எனினும் அண்மையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரங்களின்போதும், அது தொடர்பான நடவடிக்கைகளின்போதும் சிறுபான்மை மக்களைப் புண்படுத்தும்

(6ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலி-பூநகரி படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என விடுதலைப் புலிகள் அரசியல் துறை அறிவித்துள்ளது.

# இந்தியாவிலிருந்து திரும்பியோருக்கு நிவாரணம் வழங்குவதில் இழுபறி

(கொழும்பு)

இந்தியாவில் இருந்து திரும்பிய அகதிகளுக்கு நிவாரணம் வழங்குவதில் இழுபறி நிலை தோன்றியுள்ளது.

இந்த அகதிகளின் யாழ். வருகை உத்தியோகபற்றற்ற முறையில் கடந்த வருடமே ஆரம்பிக்கப்பட்டு விட்டது. எனினும் உத்தியோகபூர்வமாக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் ஆலய அலுவலக அதிகாரிகளின் மேற்பார்வையில் கடந்தவாரம் ஒரு தொகுதி அகதிகள் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர் - இவ்வாறான அகதிகள் தொடர்ந்தும் யாழ்ப்பாணம் வரவிருக்கிறார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் இவர்களுக்கு உணவு நிவாரணம் வழங்குவதற்கு யாழ். செயலகம் இது வரை நடவடிக்கை எடுக்கவில்லை.

இவர்கள் யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கப்பட்டது குறித்தோ அல்லது இவர்களுக்கான நிவாரண நடவடிக்கைகள் குறித்தோ வவுனியா மாவட்ட செயலகத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

வந்து வவுனியா ஆசிகுளம் அகதிமுகாமில் தங்கியிருந்த அகதிகளில் மேலும் ஒரு தொகுதியினர் 'மஹோ' கப்பல் மூலம் நேற்றுக் காலை பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்தனர்.

1990ஆம் ஆண்டு நடுப்பகுதியில் ஆரம்பித்த இரண் ... ஆண்டு காலப் பகுதியில் கப்பல் மூலம் திருக்கோணமலை வந்து சேர்ந்து வடபகுதி வந்தடையும் நோக்கில் வவுனியா ஆசிகுளம் அகதி முகாமில் தங்கியிருந்தனர்.

யாழ் குடாநாட்டை

(6ஆம் பக்கம் பார்க்க)

க.பொ.த உயர்தர

## பரீட்சை விண்ணப்பங்களை ஏப். 5க்கு முன் சமர்ப்பிக்குக

(யாழ்ப்பாணம்)

1994 ஆகஸ்ட் க.பொ.த. உயர்தரப்பரீட்சைக்கு தோற்றவுள்ள பாடசாலைப் பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் பரீட்சை ஆணையாளரிடம் நேரடியாக கொண்டு சென்று கையளிக்கப்படவுள்ளன.

எனவே சகல பாடசாலைகளும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை எதிர்வரும் 5ஆம் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு முன்பாக தத்தமது பாடசாலைகள் சார்ந்த வலயக் கல்வித் திணைக்களங்களில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இதற்கு அனைத்து அதிபர்களும் தவறாது முன்னுரிமை கொடுக்க வேண்டும் என யாழ்ப்பாணம் ஒன்று, யாழ்ப்பாணம் இரண்டு கல்விப் பணிப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

க. பொ. த. சாதாரண பரீட்சை

## விசாகா வித்தியாலயத்தில் 75 மாணவர் அதிவிசேடசித்தி

(கொழும்பு)

கொழும்பில் நேற்றையதினம் க. பொ. த. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகின. இம்முடிவுகளின்படி தென் பகுதியில் கொழும்பு விசாகா மகளிர் மகா வித்தியாலயத்தில் 75 மாணவர்கள் எட்டுப் பாடங்களிலும் அதி விசேட சித்தியைப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

றோயல் கல்லூரியில் 44 மாணவர்களும், கொழும்பு ஆனந்தா கல்லூரியில் 21 மாணவர்களும் எட்டுப் பாடங்களிலும் அதிவிசேட சித்தி

(6ஆம் பக்கம் பார்க்க)

## மூன்று யாழ். இளைஞர்கள் காலியில் கைது

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மூன்று தமிழ் இளைஞர்கள் மார்ச் மாதம் 27 ம் திகதி காலி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

காலி மாநகருக்கு தொழில் தேடி மேற்படி இளைஞர்கள் சென்ற போது இவர்கள் மீது பொலிஸார் சந்தேகம் கொண்டு விசேட பொலிஸ் குழுவினருக்கு அறிவித்தல் கொடுத்ததைத் தொடர்ந்து அவர்கள் மேற்படி இளைஞர்களைக் கைது செய்துள்ளதாகவும் தொடர்ந்து இவர்கள் தடுப்புக் காவலில் வைத்திருப்பதாகவும் தெரிய வருகின்றது.

# வரி விளம்பரம்

## தவறிவிட்டது

31-3-94 ஈச்சமோட்டை வீதியில் பேண பேர் என்பவர் இனிகசாம், கண்ணாடிக்குரிய பற்றுச்சீட்டு ஒரு தொகைப்பணம் அடங்கிய சிறிய கான்பாக் ஒன்றைதவறவிட்டுவிட்டார் கண்டெடுத்தவர்கள் அருளப்பு சுமதி, 195 உ-ம் குறுக்குத்தெரு பாஷையூர் என்ற விலாசத்தில் தயவு செய்து ஒப்படைக்கவும்.

(7912)

## எம். ஜி. ஆர். திருமணசேவை

சகல இனத்தவர்களின் சாதகம் எம்மிடம் உண்டு ஏற்கனவே சாதகம் தந்தவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும் வே: புண்ணியமூர்த்தி புத்தூர் சந்தி, மீசாலை.

(சி-8986)

## 'மில்க்வைற் சலவைத் தூள்

துரித சலவை பளிச்சிடும் வெண்மை, சிருடைகளுக்கு அலுவலக அணிகளுக்கு மில்க்வைற் சலவைத்தூள் உள்ளூர் உற்பத்தி, அடக்கமான பக்கற் ரூபா 6/- மொத்தக்கொள்வனவிற்கு விசேஷ கழிவு 25 மில்க்வைற் சலவைத்தூள் வெற்றுப்பக்கற்றுக்கு ஒரு அப்பியாசக் கொப்பி, 100 வெற்றுப்பக்கற்றுக்கு ஒரு சுவர்க்கடிகாரம் பெறுக மில்க்வைற்

(சி-8961)

## உடன் விற்பனைக்கு

நல்ல தண்ணீர்க் கிணற்றுடன் கல்வீடு அளவு 23/4 பரப்பு காணியுடன் விற்பனைக்கு உண்டு- சாவகச்சேரி, டச்சு வீதி, மண் இலிக் அம்மன் கோவில் அருகாமை- தொடர்பு; வித்துவான் ஆறுமுகம் இளைப்பாறிய ஆசிரியர் மண்டுவில் அம்மன் கோவிலடி சாவகச்சேரி வடக்கு.

(7917)

## தேவை

சகலவிதமான வீடியோ செற், ரேடியோசெற் வகைகள், மைக், கமறா மற்றும் எலெக்ரோனிக் பொருட்களை நியாய விலை கொடுத்து வாங்கப்படும். தொடர்புகளுக்கு மின்வளம் இல.8 கன்...

## ...வெற்றிடம்

யாழ் நகரில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள சைவ உணவகத்திற்கு காசாளர், பரிமாறுபவர்கள், சமையலாட்கள் (Cook) தேவைப்படுகின்றனர் முன் அனுபவம் உள்ளவர்கள் 2-4-94, 3-4-94 (சனி, ஞாயிறு) காலை10-00-12-00வரை நேரில் சமூகம் தர...

---

விடுமுறை காலச்சந்தை

# புதுவருடத்தை முன்னிட்டு கிழமை நாட்களில் இயங்கும்

யாழ் மாநகரசபையினால் அமைக்கப்பட்டுள்ள விடுமுறை காலச்சந்தை சித்திரை வருடப்பிறப்பை முன்னிட்டு கிழமைநாட்களில் இயங்கவுள்ளது.

யாழ்நகர் பொது வசதிக் கட்டிடத் தொகுதிக்குப் பின்புறமாக இச்சந்தை கடந்த ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மேலும் இச்சந்தை வருடப்பிறப்பு முடிவடைந்த பின்னர் விடுமுறை நாட்களில் இயங்கும் என யாழ் மாநகர சபை தெரிவித்துள்ளது (பா)

# பரீட்சை பெறுபேறுகளை எடுத்துவர முயற்சி

(யாழ்ப்பாணம்)

அண்மையில் கொழும்பில் வெளியாகிய க. பொ. த; (சாதர) பரீட்சைப் பெறுபேறுகளில் யாழ்: மாவட்டப் பெறுபேறுகளை இங்கு எடுத்துவர தீவிர முயற்சிகள் நடைபெறுகின்றன;

இப்பெறுபேறுகள் கொழும்பில் இருந்து விமானமூலம் பலாலிக்கு எடுத்துவரப்பட்டு அங்கிருந்து கப்பல் மூலமாக பருத்தித்துறைக்கு எடுத்துவரப்பட்டு யாழ்; கல்வித்திணைக்களம் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது

இதற்கான முயற்சியில் யாழ் கல்வித் திணைக்களம், யாழ். அரச அதிபர், மற்றும்தொண்டர் நிறுவனம் ஒன்றும் ஈடுபட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டது.

எனவே மிக விரைவில் பரீட்சைத் திணைக்களத்தினால் இப்பெறுபேறுகள் பொதி செய்யப்பட்டு கொழும்பில் இருந்து விமானமூலம் பலாலிக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது என தெரிய வருகின்றது.

(பா)

## இளைஞர் விடுதலை

(வடமராட்சி)

காங்கேசன்துறை கடற்படையினரால் சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞர் ஒருவர் விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டார்.

திருகோணமலையில் இருந்து நீராவி கப்பல்மூலம் காங்கேசன்துறைக்கு வந்த பயணிகளை சோதனையிட்டு விசாரணை செய்த பின்னர் உத்தியோகத்தரான இளைஞர் தடுத்து வைக்கப்பட்டு அன்று மாலை விடுவிக்கப்பட்டார்,

கரணவாய் வடக்கு நவிண்டிலைச் சேர்ந்த இவக்கொழுந்து கதிர்காமநாதன் என்பவரே கடற்படையினரால் தடுத்து வைக்கப்பட்டு விடுவிக்கப்பட்டவராவார்;

(யோ)

## கலைமாணி பரீட்சை

(யாழ்ப்பாணம்)

கலைமாணி வெளிவாரி பரீட்சை எதிர்வரும் ஒன்பதாம் திகதி நடைபெறவிருக்கின்றது.

கொழும்பில் இப்பரீட்சை நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ). (க)

---

ஆரம்பக்கல்வி சேவைக்கால

# ஆலோசகர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

அண்மையில் வடக்கு கிழக்கு மாகாண கல்வித்திணைக்களத்தால் கோரப்பட்ட சேவைக்காலப் பயிற்சி ஆலோசகர் பதவிக்கான வெற்றிடங்களில் ஆரம்பக் கல்வி விஞ்ஞானம், ஆரம்பக் கல்வி கணிதம், ஆரம்பக்கல்வி ஆங்கிலம் ஆகிய புதிய பதவிகட்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. முன்பு ஆரம்பகணித விஞ்ஞானத்திற்கு ஒன்றாகவே நியமனங்கள் இடம்பெற்றன. தற்போது ஆரம்பக்கல்விகணிதம், ஆரம்பக்கல்வி விஞ்ஞானம் எனத்தனித்தனியாக கோரப்படுகின்றது. அத்துடன் ஆரம்பக்கல்வி ஆங்கில சேவைக்காலப்பயிற்சி ஆலோசகர் பதவியணி புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் வலயம் 1-க்குரிய நல்லூர், யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, வேலணை; சாவகச்சேரி கோட்டங்களில் பணிபுரியும் தகுதியான ஆசிரியர்கள் மேற்படி பதவிகளுக்கான தமது விண்ணப்பங்களை நான்காம் திகதிக்கு முன் தமது கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிக்கல்விப் பணிப்பாளரிடம் சேர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.'தொலைக் கல்வி போதனாசிரியர் பதவி

சாவகச்சேரி கோட்டத்திலியங்கும் ஆங்கிலப் பாட பயிலுநர் ஆசிரியர்களுக்கான தொலைக்கல்வி பயிற்சிநெறியில் ஆங்கிலப்பாட போதனாசிரியர் பதவி வெற்றிடமாகவுள்ளது. இப்பதவிக்கு யாழ்ப்பாணம் வலயம் 1 இல் பணிபுரியும் தகுதியானவர்கள் தமது கோட்டத்துக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஊடாக 12-ம் திகதிக்கு முன்விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்

## கடன் அடிப்படையில் வலை விநியோகம்

த. வொ. மே நிறுவனத்தின் கடல்வள அபிவிருத்திப் பகுதியினர் மீன்பிடியை ஊக்குவிக்கு முகமாக கடற்றொழிலாளர்களுக்குத் தேவையான வலைகளை கடன் அடிப்படையில் விநியோகித்து வருகின்றனர்.

அண்மையில் வலிதெற்கு மேற்கு கடற்றொழில் கூட்டுறவு சங்க ஒன்றியத்தைச் சேர்ந்த 10 கடற்றொழிலாளர்களுக்கு ஒருவருக்கு ரூ. 5000/- பெறுமதியான வலை வீதம் விநியோகிக்கப்பட்டன.

அன்றைய தினம் 50,000 ரூபா பெறுமதியான வலைகள் விநியோகிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது

## கொழும்பு பல்கலை: திறப்பு

கால வரையின்றி மூடப்பட்ட கொழும்பு பல்கலைக் கழகம் இன்று முதல் மீண்டும் திறக்கப்படவுள்ளதாக கொழும்பு பல்கலைக்கழக துணைவேந்தர் அறிவித்துள்ளார்;

மாணவர் குழுவுக்கிடையே நடைபெற்ற மோதலைத் தொடர்ந்து பெப்ரவரி மூன்றாம் திகதி மேற்படி பல்கலைக்கழகம் மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது;

---

## தவறிவிட்டது

குணம் நகை மாளிகை கண்டி வீதி, கொடிகாமம் என்பவருடைய விற்பனைச் சிட்டைப்புத்தகம் 29 3-94 தனங்கிளப்புச் சந்திக்கும். சாவகச்சேரிக்கும் இடையில் தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் சவச்சேரி காவல்துறையிடமோ அல்லது விஜய நகைத் தொழிற்சாலையிடமோ ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்;

குணம் நகை மாளிகை
கொடிகாமம்.

சி8987

---

யாழ். மாவட்ட

# வெதுப்பக உரிமையாளர் சங்கம்

## சங்க பொதுச்சபை பிரதிநிதிகளுக்கு விசேட பொதுக்கூட்டம்

16. 04. 94

மேற்படி சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் 16-04-94 சனிக்கிழமை காலை9 30 மணிக்கு சங்கத் தலைவர் திரு. த. சிவசுப்பிரமணியம் தலைமையில் சங்க தலைமைச்செயலகத்தில் நடைபெறவிருக்கின்றது என்பதை தங்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.

உபவிதி 26இல், 7வதின் பிரகாரம் மேற்படி கூட்டத்தில் ஏதாவது பிரேரணையைப் பிரேரிக்க விரும்பின் பொதுச்சபை உறுப்பினர்களுக்கு அப் பிரேரணைப் பிரதியொன்றை 11-04-94 இற்கு முன்னர் சங்கச் செயலாளருக்கு அனுப்பிவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றோம்: குறிப்பிட்ட பிரதி பின்னர் கிடைக்கப்பெறின் பிரேரணைகள் நிகழ்ச்சிநிரலில் இடம்பெறமாட்டாது என்பதையும் தங்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

திரு த சிவசுப்பிரமணியம்,
மாவட்ட தலைவர்,
யாம வெ உ. ச;

திரு. ந. பாலவிநாயகர்,
மாவட்ட செயலாளர்,
யா. மா. வெ. உ. ச.

(சி 8990)

---

# நினைவு கூருகின்றோம்...

## 1994-04-02

1986-ம் ஆண்டு இதேதினத்தில் யாழ் கண்டி வீதியில் 18-ம் போர்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத் தொடர் வாகனவண்டிமீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய,

**ஜெஞ்சமின்** (சந்தையா பாலசுந்தரம்- சேனைபுலவு நெடுங்கேணி, மன்னாறு)

**மோகன்** (யாக்கோப் தற்குருஸ் அலெக்ஸாண்டர்- தோட்டவெளி, தாராபுரம், மன்னார்)

**யோகன்** (ஞானப்பிரகாசம் பெனாட் இரிவிரி மொறாயஸ் - எங்காலை, மன்னார்)

**2-ம்லெப். வதனன்** (சபாபதி சிவபாலன் - 6-ம் படிவம், வாரிக்குட்டியூர், வவுனியா)

1987-ம் ஆண்டு யாழ்; தொண்டமானாறு- மயிலியதனையில் சிறிலங்கா இராணுவ முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய,

**2-ம் லெப் ஜஸ்ரின்** (ஜோசப் தனசீலன் மைக்கல் அன்ரன் - தலைமன்னார் மன்னார்)

**2 ம் லெப் மார்சல்** (விக்கினராசா சந்திரவேல்- வெள்ளாங்குளம், முழங்காவில் மன்னார்)

**லெப் பாபு** (செல்லநாயகம் ரவீந்திரன் - சிவபுரவீதி ஊரிக்காடு, வல்வெட்டித்துறை, யாழ்)

---

நல்லூர் ப. நோ. கூ. சங்கம்

# பதவி வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன

**1. எழுதுநர் தரம் 302 ; 13**

கல்வித்தகைமை:

(அ) கூட்டுறவு வேலையாளர்களினது 14வது சம்பளத்திட்டத்தில் லிகிதர் பதவியில் 2 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

(ஆ) க. பொ. த. (சாதாரணதரம்) பரீட்சையில் கணிதம்/வர்த்தக எண்கணிதம்/ எண்கணிதம்/ தமிழ்ப்பாஷை உட்பட 6 பாடங்களில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத முயற்சிகளில் சித்தியும் கூட்டுறவுச் சங்க லிகிதர் பதவியொன்றில் ஒருவருடத்திற்குக் குறையாத அனுபவமும்

வயது: 18 40 வயதிற்குட்பட்டவர்கள்

சம்பள அளவுத்திட்டம்: 730—1085

20X10—25X5

இரா படிசளும்...

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

உடற்கல்விப் போதனாசிரியர்... தரம் II/I ... தகைமையுள்ளோர்களிடமிருந்து (ஆணும் பெண்ணும்) விண்ணப்பங்கள் 1994-04-29 ஆம்தேதி வரை எம்மால் பெற்றுக் கொள்ளப்படும்.

சம்பள அளவுத் திட்டம்:

ரூபா 4,160 - 6X105- 4.730 மாதமொன்றுக்கு ...

அல்லது

இ) க பொத (உத)பரீட்சையில்ஒரே தடவையில் குறைந்த பட்சம் மூன்று பாடங்களில் சித்தியுடன் விளையாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குபடுத்திசெயற்படுத்துவதில் ஐந்தாண்டு அனுபவத்துடன் ஒன்பது மாதங்களுக்கு குறையாத காலப்பகுதிக்கு ஒரு கற்கை நெறியை வெற்றிகரமாக நிறைவு செய்துவிளையாட்டுத்துறையில் ... அல்லது அதற்கு சமமான தகைமையைப் பெற்றிருத்தல் வேண்டும்.

குறிப்பு:

1) இத்தகைமைகளை விட உயர்ந்த தகைமைகளை கொண்டுள்ள அபேட்சகர்கள் தரம் 11 இற்கு நியமிக்கப்படுவதற்கு கவனிக்கப்படலாம்.

2) அடுத்த தரத்திற்குப் ...

றனர் முன் அனுபவம் உள்ளவர்கள் 2-4-94, 3-4-94 (சனி, ஞாயிறு) காலை 10-00-12-00 வரை நேரில் சமூகம் தரவும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: முகாமையாளர், நியூ யாழ் லைனில் 124, முதலாம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம். (7918)

---

## வேண்டுகோள்

29-03-1994-ம் திகதி 60-7163 இலக்க பஸ்வண்டியில் தாவடிக்குளம் சோதனைச் சாவடியிலிருந்து யூநகரி நோக்கி பயணம் செய்த வி ரவீந்திரக்குமார் (அடையாள அட்டை இல 592170477) ஆகிய எனது வடபகுதிக்குள் நுழைவோருக்கான அனுமதிச் சீட்டு தவறுதலாக கைமாறப்பட்டுள்ளது. தயவு செய்து இந்த அனுமதிச் சீட்டை வைத்திருப்பவர் சழநா[illegible]ரியாலயத்தில் ஒப்படைக்கவும். வி. ரவீந்திர குமார். (7913)

---

## விற்பனைக்கு

புதிய கோழிக் கூடுகள், பாவித்த நல்ல நிலையிலுள்ள கனதியான கூரைத்தகரங்கள் விற்பனைக்குண்டு. ஞாயிறுகளில் மட்டும் வரவும். 14/1 பிளைச்சர் ஒழுங்கை, கண்டுக்குளி (மகளிர் கல்லூரி அருகில்) (சி-8967)

## ஈஸ்ட் உற்பத்திக்கு முயற்சி

பேக்கரி உரிமையாளர்களுக்கு தேவையான ஈஸ்ட் உள்ளூரிலேயே உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் உறுதியளித்துள்ளது.

யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகளுடன் அண்மையில் தொழில்துறை மேம்பாட்டு நிறுவனம் நடத்திய சந்திப்பின் போது இவ்வாறு உறுதியளிக்கப்பட்டுள்ளது.

---

சம்பள அளவுத்திட்டம்: 730—1055 / 20X10—25X5

இதர படிகளும்

## 2. வரகணக்கத்திகாப்பாளர் 3/4/14

கல்வித்தகைமை:

(அ) க. பொ. த 15-ம் சம்பளத்திட்டப் பதவியொன்றில் ஒரு வருடத்திற்குக் குறையாத அனுபவம்

அல்லது

(ஆ) 5-ம் வகுப்பு கல்விச்சான்றிதழுடன் நல்ல தேகாரோக்கியத்துடன் இருத்தல் வேண்டும்

சம்பள அளவுத்திட்டம்: 700—950 / 15X10—20X5

இதர படிகளும்

வயது: 18—40 வயதிற்குட்பட்டவர்கள்

## 3, பயிலுநர் இளைமுகாமையாளர்

சங்க எல்லைப்பரப்பில் வசிக்கும் ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் மேற்படி பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன:

கல்வித்தகைமை:

(அ) கூட்டுறவுப் பணியாளர் சாதாரணதரப் பத்திரம் / க. பொ. த (சாதாரணதரம்) பரீட்சையில் 2 அமர்வுகளுக்குமேற்படாமல் தமிழ்மொழி / எண்கணிதம் / வர்த்தக எண்கணிதம் / தூயகணிதம் என்பவற்றினை உள்ளடக்கியதாக 6 பாடங்களில் சித்தி

சம்பந்தப்பட்ட துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வயது: 18—40 வயதிற்குட்பட்டவர்கள்

சம்பளம்: பயிற்சிக்காலத்தில் நாளொன்றுக்கு ரூபா 40/- படி வழங்கப்படும்

- விண்ணப்பங்கள் சொந்தக் கையெழுத்தில் செய்யப்பட வேண்டும்
- சங்க எல்லைப்பரப்பிலுள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்
- எல்லாப் பதவிகளுக்குமான விண்ணப்ப முடிவு திகதி 16-4-1994
- சங்கத்தால் கோரப்படும் பிணையைச் செலுத்தல் வேண்டும்
- விண்ணப்பங்கள் பொது முகாமையாளர், நல்லூர் ப. நோ. கூ. சங்கம், திருநெல்வேலி என முகவரியிட்டு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

பொது முகாமையாளர்<br>
நல்லூர், ப. நோ. கூ. சங்கம்<br>
திருநெல்வேலி.<br>
(சி-8981)

---

ரூபா 4,160 - 6X105-4,730 மாதமொன்றுக்கு

இத்துடன் நிலுவையிலுள்ள வேலை நிறைவேற்றப்படியாக 1994 டிசெம்பர் 31ஆம் திகதி வரை சம்பளத்தின் 25 சதவீதத்திற்கு சமமான தொகை செலுத்தப்படும்

ஒவ்வொருவருக்கும் ஆண்டு ரூபா 10,000/-படியும் அத்துடன் ஆண்டு அடிப்படைச் சம்பளத்தினதும், நிலுவையிலுள்ள பணியை நிறைவேற்றுவதற்கான ஆண்டுப்படியின் 10 சதவீதமும் ஒவ்வொரு காலாண்டின் ஆரம்பத்திலும் காலாண்டுத் தவணைப் புத்தகப் படியாக இத்தரத்தில், பட்டதாரித் தகைமை உள்ளவர்களுக்குச் செலுத்தப்படும்.

1993 மே 12ஆம் தேதிய 9/93 இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கேற்பமாதாந்த படியாக ரூபா 600/- செலுத்தப்படும்.

### தகைமைகள்

அ) தேசிய விளையாட்டு அணியொன்றின் உறுப்பினராகவுள்ள / தேசிய வீர முதல்வனாகவுள்ள அல்லது (பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் முன் அனுமதியுடன்) வேறு சமமான தேர்ச்சிப் பேறுகளை விளையாட்டுத்துறையில் பெற்றுள்ள அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரி.

அல்லது

ஆ) விளையாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குபடுத்தி செயற்படுத்துவதில் குறைந்த பட்சம் ஐந்தாண்டு அனுபவத்துடன் உடற்கல்வியில் முதலாம் வகுப்பு பயிற்றப்பட்ட ஆசிரியர் சான்றிதழ்.

கப்படலாம்.

2) அடுத்த தரத்திற்குப் பதவி உயர்வு பெறுவதன் முன்னர் சம்பள அளவுத்திட்டத்தின் ஆகக்கூடிய படியில் ஓராண்டுக்கு இருத்தல் வேண்டும் என்பதுடன் உடற்கல்விப் பணிப்பாளரினால் அங்கீகரிக்கப்பட்ட ஆகக் குறைந்தது இரண்டு விளையாட்டுக்களையாவது பயிற்றும் தகுதி பெற்றிருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் 20/- ரூபாவை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நிதிக் கிளையில் அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக்கிளையில் செலுத்தி இப்பல்கலைக்கழக தாபனக்கிளையின் இரேட்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில்பெறக் கூடிய படிவங்களில் விண்ணப்பித்தல் வேண்டும்.

தபால் மூலம் படிவங்களையும் விபரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாண பல்கலைக்கழக பதிவாளர் / நிதியாளர் பெயரில் பெறப்பட்ட 20/- ரூபா பெறுமதியான காசுக்கட்டளை / தபாற்கட்டளையை 23x10 ச.மீ அளவுடைய சுயமுகவரியிட்டு 1 ரூபா முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையுடன் அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரசகூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் என்பவற்றைச் சேர்ந்த விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

பதிவாளர்<br>
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்<br>
1994-03-31

(சி-8989)

---

**லெப். பாபு** (செல்லநாயகம் ரவீந்திரன் - சிவபுரவீதி ஊரிக்காடு, வல்வெட்டித்துறை, யாழ்)

இதே தாக்குதலின் போது விழுப்புண் அடைந்த நிலையில் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் வல்லைப் பகுதியில் வைத்து சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**கப்டன் முரளி** (கந்தசாமித்துரை சிறீதரன் - வேம்படி, வல்வெட்டித்துறை, யாழ்)

**2-ம் லெப். சேவியர்** (யோசப் தவசீலன் - வெற்றிலைக்கேணி, யாழ்)

**பாலச்சந்தர்** (ஞானசேகரம், லக்ஷ்மிகரன் - முள்ளியான், வெற்றிலைக்கேணி, யாழ்)

**விடுதலை** (ஜோன்பொஸ்கோ யோகநாதன் - தாளையடி, யாழ்)

**சங்கர்** (கந்தப்பு சூரியகுமார் - இலகடிவீதி, கரவெட்டி மத்தி, யாழ்)

**விந்தன்** (பூபாலசுந்தரம் ஞானகுரு - ஊறணி, வல்வெட்டித்துறை - யாழ்)

**சிவா** (சின்னத்தம்பி சிவதாஸ் - தேனாவளவு, கரணவாய் கிழக்கு, கரவெட்டி - யாழ்)

மட்டு - வலையிறவில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப் படையினரால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய,

**நடா** (தங்கராசா நடராசா - வலையிறவு, மட்டு)

1988-ம் ஆண்டு மட்டு - மாங்கேணிப் பகுதியில் தேசவிரோதசக்திகளினால் அடித்துக் கொலைசெய்யப்பட்ட,

**லிங்கன்** (நல்லதம்பி அன்ரனி - வாழைச்சேனை, மட்டு)

1989-ம் ஆண்டு திருமலை-கப்பட்டைப்பறிச்சான் பகுதியில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்துமேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**கப்டன் சத்தியன்** (புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தி தங்கநகர், கிளிவெட்டி, திருமலை)

1991-ம் ஆண்டு பலையூரில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**மஞ்சித்** (ரமேஸ் றொபேட் - செட்டிகுளம், வவுனியா)

மன்னார் - நானாட்டான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**சிவகாந்தன்** (ஆ. தவநேசன் - சுன்னாகம், யாழ்)

ஆகியோரை இந்நாளில்<br>
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-8973)

யாழ்ப்பாணம்


## கூட்டுறவு முகாமை பயிற்சிக் கருத்தரங்கு

இலங்கை கூட்டுறவு முகாமை நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபையும் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களமும் ஒன்றிணைந்து நடாத்தும் விசேட பயிற்சிக்கருத்தரங்கு:

இடம் - யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபைமண்டபம்

| திகதி | நேரம் | பங்குபற்றுவோர் |
|---|---|---|
| 4 4 94 | 9.00-4.30 | கணக்காளர் |
| 5.4 94 | 9.00-4.30 | கல்வி உத்தியோகத்தர் |
| 6.4 94 | 9.00 4 30 | கணக்காளர் |
| 7.4.94 | 9.00-4.30 | வர்த்தகமுகாமையாளர்/ உற்பத்தி முகாமையாளர் |
| 9.4.94 | 9.00-4.30 | கணக்காளர் |
| 10.4.94 | 9.00-4.30 | பொதுமுகாமையாளர் |
| 11.4 94 | 9.00-4.30 | பொதுமுகாமையாளர் |
| 12.4.94 | 9.00-4.30 | பொதுமுகாமையாளர் |

பங்குபற்றும் சங்கம்:

1. பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம்
2. பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கம்
3. பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்க கொத்தணி
4. பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்க சமாசம்
5. யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்க சமாசம்
6. யாழ் மாவட்ட விவசாய உற்பத்தி விற்பனவு நுகர்ச்சி கூட்டுறவுச் சங்க சமாசம்
7. யாழ் மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்
8. யாழ் மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்
9. வடமாகாண கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசம்

மேற்குறிப்பிட்ட அட்டவணையின் பிரகாரம் குறித்த அனைத்து சங்கங்களும் உரிய பணியாளர்களை கருத்தரங்கில் பங்குபற்ற நடவடிக்கை எடுத்து ஒத்துழைக்குமாறு சங்க நிர்வாகத்தினர் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

பதில் செயலாளர்
யாழ் மாவட்ட கூட்டுறவுச்சபை
இல. 14, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். (சி-8982)


## போலி நகை அடைவு நபர் நீதிமன்றில் ஆஜர்

(தென்மராட்சி)

தங்க நகையென போலி நகையினை ஏமாற்றி அடைவு வைத்தவர் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

நாவற்குழியைச் சேர்ந்த ஒரு நபர் பளைப் பகுதியைச் சேர்ந்த நபரிடம் 54 500 ரூபாவிற்குபோலி நகையினை அடைவு வைத்து பணம் வேண்டினார். நகைக்கு பணம் கொடுத்த மேற்படி நபர் தான் தனக்குத் தேவை ஏற்பட்ட போது திடீரென வேறு ஒருவரிடம் கொண்டு சென்று அடைவு வைக்க சென்றபோது போலி நகை என தெரிய வந்தது. இவரின் பளை காவல்துறையின் முறைப்பாட்டின்படி குற்றவாளியை சாவகச்சேரி நீதிமன்றில் காவல்துறையினர் ஆஜர் செய்த போது குற்றவாளி குற்றத்தினை ஒப்புக் கொண்டார். இதன் பிரகாரம் நீதிமன்று குற்றப்பணமாக 4000 ரூபா கட்டும்படியும் தவறின் 160 நாள் சிறைத்தண்டனையும் இதேவேளை 54,500 ரூபா இழப்பீட்டு தொகையாக கட்டும்படியும் தீர்ப்பளித்தது.

இதேவேளை இதே நபர் பளை வண்ணங்கேணிப்பகுதியில் இதேபோன்று ஒரு நபரிடம் போலி நகைகளை வைத்து 70,000 ரூபா பெற்றுள்ளார். இதற்கும் குற்றத்தினை ஒப்புக் கொண்டதினால் இழப்பீட்டுதொகையை கட்டும்படியும் 5000 ரூபா குற்றப்பணம் கட்டும்படியும் குற்றப்பணம் கட்டத்தவறின் 200 நாட்கள் சிறைத்தண்டனையும் என நீதிமன்று தீர்ப்பளித்தது. (86)

## இளைஞர் கடன்

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் மூலம் அந்தந்தப் பகுதிப் பிரதேசச் செயலாளர் பிரிவு பிராந்திய சபை மூலம் இளைஞர் கடன் வழங்கப்படவுள்ளது.

அங்கத்துவ சங்கங்கள் சமாசத்துடன் தொடர்பு கொண்டு முன்னுரிமை அடிப்படையில் ஐயாயிரம்ரூபாவை இளைஞர் கடனாகப் பெறலாம். (24)

## பயிலுநர் ஆசிரியர்கள் விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தமிழ்மொழி மூலமான பயிலுநர் ஆசிரியர்களை நியமனம் செய்வதற்குவிண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. மேற்படி பதவிக்கு விண்ணப்பிப்பதற்கான மாதிரி விண்ணப்பப் படிவமும் தேவையான தகுதிகள் பற்றிய விபரங்களும், எமது அலுவலகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவர்கள் அலுவலகநேரத்தில் பார்வையிடலாம். (தி.க)


அப்பாடா என்னவெய்யில்...!
கொக்காகோலா இல்லாததன் அருமை.
இப்போது தான் தெரிகிறது.

கவலையை விடுங்கள்

இதோ உங்கள் கவலையைப் போக்க

)( பொப்கோலா )(

வந்து விட்டது

- உலகப்புகழ் பெற்ற கோலா சுவையோடு
- பொருத்தமாக்கப்பட்ட உயர் தொழில்நுட்ப முறையோடு
- உரிய அளவு காற்றூட்டத்தோடு
- சௌகரியமான விலையில் ...

பெற்றுக்கொள்ளுங்கள்


## 1-ம் வருட நினைவஞ்சலி



### திருமதி சத்தியபாமா சசிதரன்

மலர்வு: 28-3-1958 உதிர்வு: 13-4-1993

திதி: ஸப்தமி 02 04-1994

குமணக்கப்பல் உருவாய்க் கொடிய காலன் வந்து
கொழும்புநகர்க்கு சிகிச்சைக்கு உனை அழைத்தான்
நம்பிக்கையான் துணை புரிவரென நித்தமும் தொழுவாயே
நம்பிக்கையோடு நாமிருந்தோம் - என்ன பயன்
ஈசன் கழல் நீயிணைந்து ஈராறு மாதம் சென்றதால்
பூசனை புரிகின்றோம் நின் ஆன்மசாந்திக்கே.

கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை (இ-8969)

அன்புக் கணவர், பெற்றார், உற்றார், உறவினர்.

## 7-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில் 14.11.1967

மண்ணின் விடிவில் 02.04.1987

### வீரவேங்கை பாலச்சந்தர்

(ஞா. லஷ்மீகரன்)

(வெற்றிலைக்கேணி)

பாசவலைக்குள் சிக்குண்டு விழாமல் - எங்கள்
பாசத்தை வென்றவனே
ஈழத்தை மீட்க களமதில் குதித்த - இனிய
பாலச்சந்திரனே
விடுதலைத் தாகம் கொண்டு - விடிவின்
ஒளியைப் பார்த்திட

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 22-02-1931

மறைவு: 13-04-1993

திதி: 02-04-1994

### அமரர் வேலுப்பிள்ளை பூவிலிங்கம்

(100, இராமநாதன் வீதி, நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்)

செய்தொழிற் றெப்பினாலே சீரிய வாழ்வு ஏற்று
மெய்மையாய் மிளிர்ந் மிக்கதோர் மேன்மையானன்
உய்தனன் உயர்ந்த சேவை உள்ளன் போடாற்று
மாற்றல்
கைவந்த பூவிலிங்கக் கலைஞனை நினைவிற்கொள்
வோம்

430, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

பாரதி பதிப்பகம்

(சி-8983)

---

ஏக விநியோகஸ்தர்

# வாமாஸ்

121/2 மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-8964)

---

மறுதலைத் தீரம் கொண்டு - விடிவின்
ஒளியைப் பார்த்திட
வீரச் செயல் பல புரிந்தாய் - பிர
பாகரன் வழி நீ நடந்தாய்
காற்றோடு உன்னுயிர் கலந்தாலும் - கல்
லறைக்குள் உடல் இருந்தாலும்
கண்முன்னே உன் நினைவு வருகுதய்யா -
வேங்கைத
உள்ளமும் கலங்குதய்யா!
ஏழாண்டு உருண்டோடி விட்டதய்யா - நாங்கள்
ஏங்கித் தவிக்கின்றோமய்யா
மாறாது மறையாது உன்புகழே - எங்கள்
மாசற்ற உள்ளமே வணங்குகின்றோம்;
இவருடன் வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கும்
எமது அஞ்சலிகள்.

பருத்தித்துறை; (7883) குடும்பத்தினர்

---

## சேவை நலம் பாராட்டு விழா

ஓய்வு பெறும் அதிபர்
**திரு ஐ. வேலாயுதர்**
யாழ். இருபாலை சி. சி. த. க
பாடசாலை, கோப்பாய்.



பாடசாலைச் சிறுவர்களின் கல்வி மேம்பாட்டுடன், அவர்களைச் சிறந்த ஒழுக்கம், கட்டுப்பாடு உடையவர்களாகவும், உயர்த்தி நன் மதிப்பை பெற்றுள்ளார் இவ்வேளையில் அன்னாரைப் பாராட்டி, பல்லாண்டுகாலம் பாரினிலே வாழ்கவென வாழ்த்துகிறோம்.

அவருடைய சேவை நலம் பாராட்டு விழா பாடசாலையில் 02-04-94 பி.ப.3.00 மணிக்கு நடைபெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

1986ஆம் ஆண்டு இப்பாடசாலைக்கு ஆசிரியராகக் கடமையேற்றார் 1989ஆம் ஆண்டு அதிபரான காலம் தொடக்கம் இன்று வரையும் பாடசாலை வளர்ச்சிக்கு அயராது உழைத்தவர்.

பா. அ. சங்கம்
பா. அ. சபை
பழைய
மாணவர்கள்.

(7894)

---

அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட

# பவளவிழா - 1994

மேற்படி விழாவையொட்டி மாவட்ட ரீதியான

## மாபெரும் விளையாட்டுப் போட்டிகள்

காலம்: 12-04-1994 காலை 6.00 மணிக்கு
இடம்: அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம்

**வர்த்தகத் திணைக்கள ஊழியர்களின் ஆதரவில்**

1. ஆண்களுக்கான 25மைல் சாதாரண சைக்கிள் ஓட்டப்போட்டி
   1-வது பரிசு புத்தம்புது லுமாலா சைக்கிள்
2. 10மைல் பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டி
   1-வது பரிசுபுத்தம்புது லுமாலா சைக்கிள் (பெண்களுக்கான)
3. 10மைல் மரதன் ஓட்டப்போட்டி
   காலம்: 13.04.1994 காலை 6.30 (ஆண்கள்)

**வெற்றி பெறுவோருக்கு சிறந்த பரிசில்கள் வழங்கப்படும்.**

விண்ணப்பங்களுக்கும் திரு. எஸ்.கே. சண்முகலிங்கம்,
மேலதிக விபரங்களுக்கும் அரியாலை சனசமூக நிலையம்

எஸ். எஸ். சத்தியசீலன்
விளையாட்டுச் செயலர்,
அரியாலை சரஸ்வதி,
சனசமூக நிலையம்;

(சி-8984)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பிதழும்



தாயின் மடியில்
24.12.1973

தமிழீழ மண்ணில்
03.03.1994

## லெப்டினன்ட் இந்திரன் / ஸ்ரீதர்
(பசுபதி நந்தமோகன்)

வான் முகில்கிழித்து வரும்பகை எதிர்ப்போம்
வருகின்ற எதிரியை வதைத்து நாம் வெல்வோம்
எம் உயிர் ஈந்தும் தமிழ் ஈழம் அதைக்காப்போம்
தமிழ் மக்கள் நெஞ்சத்தில் நிலைத்து என்றும்
வாழ்வோம் என்ற
மாவீரர் ஆகி விட்டாய் செப்பு ஸ்ரீயே!

மாயக்கை
புலோலி மேற்கு,
பருத்தித்துறை; குடும்பத்தினர்

(7872)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

MBBS பரீட்சையில் சித்தி யடைந்தவர்களிடமிருந்து அல்லது மார்ச் 1994-ல் இறுதி MBBS பரீட்சைக்கு தோற்றியவர்களிடமிருந்து மருத்துவ பீடத்தின் பின்வரும் துறைகளுக்கான தற்காலிக செய்முறைக் காட்டுநர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன:

உடலமைப்பியல்
உடற்றொழிலியல்
சமூக மருத்துவம்
மருந்தியல்
சட்ட மருத்துவம்
நோயியல் (நுண்ணுயிரியலும் ஒட்டுண்ணியியலும் உட்பட)
மனநோயியல்
அறுவை மருத்துவம்
மருத்துவம்
குழந்தை மருத்துவம்.

சம்பள அளவுத்திட்டம்:

ரூபா 4420/- நிலையானது (மாதமொன்றிற்கு) பரீட்சைப் பெறுபேறுகளிற்காக காத்திருப்போர் ரூபா 4100/- நிலையானது (மாதமொன்றிற்கு) சம்பளத்தில் வைக்கப்படுவர்;

குறிப்பு: இத்துடன்

அ) 1993 மே 12-ம் தேதிய 9/93 இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப வாழ்க்கைச் செலவுப் படியாக ரூபா 600/- செலுத்தப்படும்

ஆ) 1994 டிசெம்பர் 31-ம் திகதி வரை நிலுவையிலுள்ள வேலைகளை நிறைவேற்றும்படியாக மேற்குறித்த சம்பளத்தில் 25 சதவீதத்திற்குச் சமமான தொகை செலுத்தப்படும்;

விண்ணப்ப முடிவு திகதி: 1994 - 04 - 11 ஆகும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையில் அல்லது பல்கலைக்கழக நிதிக்கிளையில் ஒவ்வொரு விண்ணப்ப படிவத்திற்கும் ரூபா 20/- செலுத்திய பின்னர் இப்பல்கலைக்கழகத்தின் தாபனக் கிளைச் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் மாத்திரம் விண்ணப்பங்கள் செய்யப்படவேண்டும்;

தபால் மூலம் படிவங்களையும் விபரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் / நிதியாளர் பெயரில் பெறப்பட்ட ரூபா 20/- பெறுமதியான காசுக்கட்டளை / தபாற் கட்டளையுடன் சுயமுகவரியிட்டு 1/- ரூபா முத்திரை யொட்டப்பட்ட 23 X 10 ச. மீ அளவுடைய கடித உறையை அனுப்புதல் வேண்டும்

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்டசபைகளின் விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்;
(1994-03-25)
(சி-8976)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 1993/94 கல்வியாண்டிற்கு பின்வரும் கற்கை நெறிகளுக்கு வெளிநிலைத் தேர்வு நாடியாக பதிவு செய்ய விருப்புடைய தகைமைபெற்றவர்களிடம் இருந்து 1994 ஏப்பிரல் 4-ந் திகதி தொடக்கம் யூன் 30-ந் திகதி வரை விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்படும்.

1. வர்த்தக முதற் கற்கை நெறி
2. கலை முதற் கற்கை நெறி
3. பொதுக் கலைமாணி பகுதி 1
4. சிறப்பு கலைமாணி பகுதி 1
5. வர்த்தகமாணி பகுதி 1

பின்வரும் பாடங்களில் மாத்திரம் சிறப்புக் கலைமாணி கற்கைநெறிக்குப் பதிவு செய்து கொள்ளலாம்; (இந்துநாகரிகம், வரலாறு, புவியியல், பொருளியல், மெய்யியல், அரசறிவியல், தமிழ், நுண்கலை, நாடகமும் அரங்கியலும், சமஸ்கிருதம், கிறிஸ்தவ நாகரிகம்);

விண்ணப்பப் படிவங்களுக்கு உரிய விபரங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வெளிநிலைப்பதிவு, தேர்வு அலுவலகத்தில் இருந்து நேரடியாகவோ தபால் மூலமாகவோ 1994 ஏப்பிரல் 4-ந் திகதி தொடக்கம் பெற்றுக் கொள்ளலாம்;

விண்ணப்பப் படிவத்தையும் பாடத்திட்டத்தின் பிரதியையும் நேரடியாக பெற விரும்புவோர் யாழ் பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கியில் 50/- ரூபாய் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும். தபால் மூலம் இவற்றை பெற விரும்புவோர் யாழ் பல்கலைக்கழகத்தின் நிதியாளருக்கு எழுதப்பட்ட 50/- ரூபா காசுக்கட்டளை-தபால் கட்டளையுடன் சுயமுகவரியிட்டு ரூபா 12/- பெறுமதியுடைய முத்திரை யொட்டப்பட்ட 28 × 20 செ: மீ அளவுடைய தபால் உறையினையும் அனுப்புதல் வேண்டும்

1992/93 கல்வியாண்டிற்காக ஏற்கனவே பதிவு செய்துள்ளோருக்கு இவ்வறிவித்தல் ஏற்புடையதல்ல;

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
(சி-8977)


## தகவல் வங்கி மேம்படுத்தப்படும்

தமிழீழ பொருண்மியமேம்பாட்டு நிறுவனத்தின் புள்ளி விபரக்கிளையினர் தகவல்வங்கி செயற்பாட்டை மேலும்விரிவு படுத்துவதிலும் நடப்பாண்டுக்குரிய தகவல்களை களத்தில் மீளாய்வு செய்து திரட்டுவதிலும் ஈடுபட்டுள்ளனர்.

புள்ளி விபரக் கிளையினர் தமிழீழம் தழுவிய அளவில் சமூகப் பொருளாதாரத் தரவுகளைத் திரட்டி, பகுத்து தொகுத்து ஆவணப்படுத்தி வருவதுடன் சந்தை விலை விபரங்கள் விவசாயம் சார் தரவுகள், குடித் தொகைத் தரவுகள், கல்வி, சுகாதாரம், சமூகசேவை போன்றவற்றுடன் தொடர்புடைய தகவல்கள் பின் தங்கிய கிராமங்களின் மூலவள அளவீடுகள் போன்ற பல தரவுகளையும் களத்தில் சேகரித்து பகுத்து தொகுத்து ஆவணப்படுத்தி வருவது தெரிந்ததே;


## 7-ம் ஆண்டு நினைவலைகள்

மன்னாரில் முத்தாய்: 08 - 01 - 1968

மயிலியதனையில் வித்தாய்: 02 - 04 - 1987

### 2-ம் லெப். மார்ஷல்
### [விக்னராஜா சக்திவேல்]
வெள்ளாங்குளம், மன்னார்.

மறத்தமிழர் மரபுவந்த மகனே மார்ஷல்
புறங்காட்டா புலியாகிப் புறப்பட்ட நீ
அறப்போரைத் தொடுத்து நின்றாய்
அன்னைத் தமிழின் சுதந்திரம் கண்டிட!
மானத்தை வென்று மண்ணையே நேசித்த நீ
மார்பினிலே குண்டேந்தி மரணத்தை யாசித்தாயா!
எம் அன்புத் தெய்வமே அணையாத விளக்கே
எம் பாசத்தின் பொக்கிசமே பதறுகிறோம் உன்பிரிவால்!

02-04-1987 அன்று மயிலியதனை இராணுவ முகாம் நேரடித் தாக்குதலில் இறுதிவரை போராடி உயிர்த் தியாகம் செய்த பத்து வேங்கைகளுக்கும் எம் கண்ணீர் அஞ்சலிகள்;

29/6, புகையிரத நிலைய வீதி,
புங்கன்குளம். (7908) குடும்பத்தினர்;



## அறிவித்தல்

### தட்டுப்பாடின்றி படச்சுருள் பெற்றுக் கொள்ள...

என்னும் எமது திட்டத்திற்கமைய - பெப்ரவரி 94ற்கு முன்னர் பதிவு செய்த வாடிக்கையாளர்களிற்கான படச்சுருள்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. 07 - 04 - 94ற்கு முன்னர் நேரடியாக பெற்றுக் கொள்ளவும்;

நிர்வாகம்
கலக்சி புகைப்படசேவை
(7915) யாழ்ப்பாணம்.



## யாழ். வணிகர் கழகம் விடுக்கும்

## முக்கிய அறிவித்தல்

கடந்த 30-03-94-ல் யாழ். வணிகர் கழகத்திற்கும் யாழ்; வணிக ஊழியர் கழகத்திற்கும் நடைபெற்ற கலந்துரையாடலின் பிரகாரம் வருகிற 09-04-94, 10-04-94 (சனி, ஞாயிறு) தினங்களில் புதுவருட தினத்தை முன்னிட்டு வணிக நிலையங்களை முழுமையாக திறந்து வியாபாரம் செய்யலாமென யாழ்; வணிகர் கழகத்திற்குட்பட்ட சகல வணிகப் பெருமக்களுக்கும் அறியத்தருகிறோம்;

நன்றி, வணக்கம்;

(சி-8979) யாழ். வணிகர் கழகம்



## பேராதனைப் பல்கலைக்கழக (வெளிவாரி) பட்டப்படிப்புகள்

கலைமாணி (B.A.)

விஞ்ஞானமாணி (B.Sc) புள்ளிவிபரவியல்

க. பொ; த; உயர்தரம் பரீட்சையில் 180 புள்ளிகளைப் பெற்றவர்கள் கலைமாணிப் பட்டப் படிப்புகளுக்கு பதிவு செய்து கொள்ளலாம் அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்;

விண்ணப்பப் படிவங்களை உடன் பெற்று பதிவு செய்து கொள்ளவும்.

விபரங்களுக்கு
உதவிப்பதிவாளர்
பட்டப்படிப்புகள் கல்லூரி,
148/1, கிராண்வி வீதி;
யாழ்ப்பாணம்;
(சி-8958)


# உலகப்புகழ் மேதைக்கு உளமார்ந்த வாழ்த்துக்கள்

அறிவியலும் அருளியலும் தேர்ந்தோன்
அனைவர் உளங் கவர்ந் தோன்
பல்கலைக்கழகம் வளம் பெற
உழைத்த கலைஞன்
அ. துரைராசா அவர்களே சென்று வருக இனிதே

தமிழ் ஈழ வளம் பெருக்கும் பெரும் பொறுப்பை
இனிமையும் பணிவும் துணைநின்று செம்மையுடன்
செய்ய மீண்டும் வருக பெரியோர்

வாழ்த்தி வணங்கும்

**மு. சி. சண்முகராசா**
செயலாளர்,
வடமாகாண அரசாங்க ஒப்பந்தகாரர் சங்கம்.



அறிவியல் மேதையின்

# லௌகீக ஆன்மீக சிந்தனைகள்

உலகில் புகழ்பெற்ற பல்கலைக்கழகங்கள் பேராசிரியர் துரைராசா அவர்களை இருகரம் நீட்டி வரவேற்க இருந்தும் பிறந்த நாட்டிற்குச் சேவை செய்யும் சிந்தனையால் இங்கு வாழ்வாங்கு வாழ்கின்றார். யாவர்க்கும் உதாரண புருஷனாக வரலாறு படைத்துள்ளார்.

பல தொழில் வாய்ப்புக்கள் உருவாகவும், நிர்மாண வேலைகள் நடைபெறவும் மூலகாரணியாக இருந்துள்ளார். எதிர்காலங்களிலும் இவை நடைபெற வித்திட்டுள்ளார்.

மண்ணில் நீர், வெப்பம், வாயு, வெளி என்பன உண்டு என்பதைப் போதித்த அறிவியல் மேதை ஐம்பூதங்களின் தத்துவத்தை போதிக்கும் ஆன்மீகவாதியாக யாழ் பல்கலைக்கழகத்தில் சைவ சித்தாந்த பாடத்தை நிறுவ முயற்சிகள் எடுத்துள்ளார்.

பேராசிரியரே வாழிய வாழிய நீடு காலம்
வளர்க வளர்க உங்கள் சிந்தனைகள்

**ச. கு. சிவானந்தன்**
தலைவர்,
வடமாகாண அரசாங்க ஒப்பந்தகாரர் சங்கம்.

சீரிய பணி செய்திர்
சிறப்புடன் சென்று வாரீர்
**தேசநிர்மாணிகள் உட்கட்டுமானப் பகுதி**
3, சம்பியன் ஒழுங்கை,
கொக்குவில்,

நேரிய வாழ்வு வாழ்ந்திர்
வளம் பல பெற்று வாரீர்
**கே. ஏ. என்ஜினியேஸ்**
82 (50) கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

மக்களை நேசித்த வேந்தே அவர்
மனத்துயர் தீர்க்க கருமம் ஆற்றி வாரீர்
**என். சி. சி. எல்**
15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

அரும் பணி பல செய்திர்
அறம் வளர்த்திடச் சென்று வாரீர்
**மனோகரன் வெற்றிவேல்**
49 ஏ அம்பலவாணர் வீதி,
யாழ்ப்பாணம்.

கல்விக்கடலே குணக் குன்றே
கருமங்கள் ஆற்றிடச் சென்று வாரீர்
**குளோபல் என்ஜினியரிங்**
ரெக்நொலொஜி சேர்விஸ்
82, கச்சேரி நல்லூர் றோட்,
யாழ்ப்பாணம்,

தமிழ் ஈழம் வான்புகழ் கொள்ளச்
செய்திர் சென்று வாரீர்
**புற மோட்டர்ஸ் என்ஜினியரிங்**
கொம்பனி லிமிட்டெட்
844, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தொழில் துறை வளரச் செய்திர்
தொல்லைகள் நீக்கச் சென்று வாரீர்
**பிரதீப் என்ஜினியேஸ்**
கோவில் வீதி,
கொக்குவில் கிழக்கு
கொக்குவில்.

(இ-8980)

**மலர் வெளியீடு: வடமாகாண அரசாங்க ஒப்பந்தகாரர் சங்கம், இல. 10, சம்பியன் ஒழுங்கை, கொக்குவில்,**

மன்றம் யாழ்ப்பாணம்

சிந்தனைக்கு

உலகின் ஒரு பாதி, உலகின் மறுபாதியின் மகிழ்ச்சிகளை புரிந்து கொள்ள முடியாது.

- ஜேன் ஆஸ்ட்டின்

ஈழநாதம்

11, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 02-04-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2031
தபால் பெட்டி எண் 05

# உலக நாடுகளிடம் ஒரு வேண்டுகோள்

இனப்பிரச்சினை விவகாரத்தில் சர்வதேச உலகம் இன்று ஒரு கணம் தனது கவனத்தைத் திருப்ப வேண்டும். இது இனப்பிரச்சினையில் நேரடியாகத் தலையிட்டு பிரச்சினையைத் தீர்த்து வைக்கவேண்டும் என்பதற்கான பகிரங்க வேண்டுகோள் அல்ல. இனப்பிரச்சினை விவகாரத்தின் இன்றைய நிலையை புரிந்துகொள்வதற்காக. இது இன்று சில வேளை முக்கியமாக இல்லாது தெரியலாம். ஆனால், எதிர் காலத்தில் இதன் முக்கியத்துவம் பெரிதாக மாறலாம் என்பதினால் ஆகும்.

இனப்பிரச்சினைக்கு சமாதானரீதியில் ஓர் அரசியல் தீர்வைக் காண விடுதலைப் புலிகள் இயக்கம் தயாராக இருப்பதாகப் பல தடவைகள் அறிவித்துள்ளது. அதற்கு ஏற்றால்போல் சமாதானம் ஏற்படுத்துவதற்கான முன் முயற்சியில் ஈடுபட்டவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளது. வழங்கியும் வருகின்றது. இந்த வகையில் விடுதலைப் புலிகள் இயக்கம் சமாதானத்திற்கான கதவுகளை அகலவே திறந்து விட்டுள்ளது.

ஆனால், சிறிலங்கா அரசாங்கத்தின் நிலைப்பாடானது இதற்கு எதிர்மறையாகவே இருந்துவருகின்றது. இனப்பிரச்சினை விடயத்தில் இராணுவத்தீர்வே ஒரே தீர்வு என்ற வகையில் செயற்பட்டு வருகின்றது. இந்த வகையில் சமாதான முயற்சிகளையும் முறியடித்து வருகின்றது.

அண்மைக்காலத்தில் இனப்பிரச்சினைக்குச் சமாதான ரீதியான தீர்வொன்றைக் காண்பதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பலவாகும். இதில் பல மதக் குழுக்கள், அவற்றின் தலைவர்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் என பல அமைப்புக்கள், பலதரப்பினர் சமாதான முன் முயற்சிகளில் ஈடுபட்டபோதும் அரசாங்கம் அவற்றிற்கு வரவேற்பு அளிக்கவில்லை. மாறாக அது காலத்தையும் பொருளையும் விரயமாக்கும் செய்த விடயங்களாக மாறவே வழிசெய்தது.

இதேபோன்றே வெளிநாட்டில் இருந்து மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகள், சமாதானத்திற்கான அழைப்புக்கள் என்பனவும் அரசாங்கத்தால் நிராகரிக்கப்பட்டன. வெளிநாட்டு மத்தியஸ்தம் என்பதே தேவையில்லை என்றும் அடித்துக் கூறப்பட்டது. இதனால்,

# சுதந்திரக் கட்சிக்கு வருமாறு அநுராவுக்கு சிறிமாவோ அழைப்பு

(கொழும்பு)

அநுரா பண்டாரநாயக்காவை மீண்டும் சுதந்திரக் கட்சிக்கு வரும்படி அழைக்கின்றேன் ஆனால் அவர் வந்தால் அவரை ஏற்றுக்கொள்வது பற்றி கட்சிதான் முடிவெடுக்கும் என எதிர்க்கட்சித் தலைவி சிறிமவோ பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

சிராவஸ்தியில் செய்தியாளர் மாநாட்டில் பேசிய அவர், அநுரா பண்டாரநாயக்கா அவ்வாறு தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு மீண்டும் சுதந்திரக் கட்சிக்கு வருவாரானால் அவரது நிலைப்பாடு குறித்து கட்சி முடிவெடுக்கும் என்றார். தொடர்ந்து அநுரா ஐ.தே. கவில் அங்கம் வகிப்பாராயின் அது குறித்து தமக்கு ஆட்சேபனை இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக அவரது கட்சி சார்பில் யார் நியமிக்கப்படுவார் எனக்கேட்ட போது அது பற்றி கட்சியே முடிவு செய்யும் என சிறிமா தெரிவித்தார்.

# இன்னமும் 59,960 அகதிகள் மட்டக்களப்பில் உள்ளனர்

## மாவட்ட செயலக அறிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து வரும் வன்செயல்கள் காரணமாக 12,832 குடும்பங்களைச் சேர்ந்த 59,960 பேர் இன்னமும் அகதிகளாக இருப்பதாக மாவட்ட செயலகத்தினால் வெளியிடப்பட்ட நிலைவர அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது 11அகதி முகாம்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் 1,115 குடும்பங்களைச் சேர்ந்த 4,692 பேர் அகதிகளாக உள்ளனர். தமது சொந்த இடங்களை விட்டு இடம் பெயர்ந்து 10,917குடும்பங்களைச் சேர்ந்த 55,268 பேர் இன்னமும் உறவினர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர்.

மண்டூர் கந்தசுவாமி கோவில் அகதிமுகாமில் 158 குடும்பங்களைச் சேர்ந்த 775 பேரும் சித்தாண்டி முகாமில் 19 குடும்பங்களைச் சேர்ந்த 92 பேரும் ஆறுமுகத்தான் குடியிருப்பு முகாமில் 23 குடும்பங்களைச் சேர்ந்த 78பேரும் ஓட்டமாவடி முகாமில் 112 குடும்பங்களைச் சேர்ந்த 561 பேரும் பேத்தாழை அகதி முகாமில் 404 குடும்பங்களைச் சேர்ந்த 1,640 பேரும் அகதிகளாகத் தங்கியுள்ளனர்.

மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் உள்ள சாகிரா வித்தியாலய முகாமில் 183 குடும்பங்களைச் சேர்ந்த738பேரும்திருக்குடும்பகன்னியர் மடத்தில் 36குடும்பங்களைச் சேர்ந்த 57பேரும் கல்லடி விசித்திர நெசவு நிலையத்தில் 32 குடும்பங்களைச்சேர்ந்த 116பேரும் நாவற்குடா மாநகரசபை மண்டபத்தில் 53 குடும்பங்களைச் சேர்ந்த 116 பேரும் தங்கியுள்ளனர்.

# மருத்துவ பீடத்திற்கான மாணவரின் அனுமதி இம்முறை குறைப்பு

## கொழும்பு, றுகுணு பல்கலைக்கழகங்கள் காரணம்

(கொழும்பு)

1993-94ஆம் ஆண்டுக்கான பல்கலைக்கழகமருத்துவபீடங்களுக்கு இம்முறை 788 மாணவர்களே தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். கடந்த வருடம் 817 பேர் மருத்துவபீடங்களுக்குத் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர்.

கொழும்பு, றுகுணு பல்கலைக்கழக மருத்துவ பீடங்களின் பீடாதிபதிகள் அங்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும்படி கேட்டுக்கொண்டதே இதற்குக் காரணம் என பல்கலைக்கழக விவகார அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்கா தெரிவித்தார்.

கொழும்பு, றுகுணு பல்கலைக்கழகங்களில் போதிய பீட வசதிகள் இல்லாததால் குறைவானமாணவர்களையே அனுமதிக்கும்படிமேற்படி பல்கலைக்கழகங்களின் பீடாதிபதிகள் அமைச்சரைக் கேட்டிருந்தனர். அல்லது மாணவர்களது கல்வித்தரம் பாதிக்கப்படும். இதன் விளைவாக எதிர்கால வைத்தியர்களின் தரமும் பாதிக்கப்படும் என அவர்கள் தெரிவித்தனர்.

கொழும்புப்பல்கலைக்கழகத்திற்கு 175 மாணவர்களை மட்டுமே அனுமதிக்கும்படி கேட்கப்பட்டிருந்தது. எனினும் இம்முறை 178 பேரை அனுமதிக்க இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் கடந்த வருடம் கொழும்பு மருத்துவபீடத்திற்கு 193பேர் அனுமதிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. றுகுணு பல்கலைக்கழகம் இம்முறை 100 மருத்துவபீட மாணவர்களை மட்டுமே அனுமதிக்க முடியுமென கூறியுள்ளது கடந்தமுறை அங்கு 128 பேர் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

# எவ் 16போர் விமானங்கள் பாக்.இற்கு விற்க முயற்சி

## செனட்டர் பிரெஸ்லர் குற்றச்சாட்டு

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் ஏரோஸ்பேஸ் தொழிற்சாலைக்கு உதவுவதற்காக எவ் 16 ரக போர் விமானங்களை பாகிஸ்தானுக்கு விற்க கிளின்டன் நிர்வாகம் விரும்புகிறதென குடியரசுக் கட்சி செனட்டர் திரு. லாறி பிரெஸ்லர் கூறியுள்ளார்.

பாகிஸ்தானின் அணுவாயுத திட்டத்தை அடுத்து அதற்கு எந்த வித இராணுவ சாதனத்தையும் விற்பதை தான் எதிர்ப்பதாக வாஷிங்டனில் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியொன்றில் திரு பிரஸ்லர் குறிப்பிட்டார்.

அணுவாயுத திட்டங்களை பாகிஸ்தான் மேற்கொள்ளும் போது அதற்கு போர் விமானங்களை வழங்குவதை ஆயுதக் கட்டுப்பாடு என்பதை அர்த்தமற்றதாக்கி விடும் என்று திரு பிரெஸ்லர் மேலும் தெரிவித்தார்.

பாகிஸ்தானிய பேரத்தினால் லாகீர் நிறுவனத்தின் செக்சஸ் ஆலையில் உற்பத்தி அதிகரிக்கக் கூடும் என்று இராணுவ நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

# 3 நாள் யுத்த நிறுத்தம் ஐ.ஆர்.ஏ. அறிவிப்பு

(லண்டன்)

வட அயர்லாந்தில் மூன்று நாட்களுக்கு யுத்த நிறுத்தம் செய்யப்போவதாக ஐ.ஆர் ஏ அறிவித்துள்ளது.

வட அயர்லாந்தில் எதிர்காலம் குறித்துப் பேச்சு வார்த்தை நடத்தவேண்டும் என்று ஐ. ஆர். ஏ. விடுத்த வேண்டுகோளை பிரிட்டிஷ் அரசும், ஐரிஸ் குடியரசும் நிராகரித்துள்ளன.

தன்னலம் கருதி விடுக்கப்பட்ட வேண்டுகோள் இது என்று வட அயர்லாந்துக்கு வருகை தந்துள்ள பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜர் இந்த வேண்டுகோளை நிராகரித்துள்ளார் ஐ. ஆர். ஏ. துப்பாக்கிகளை நிரந்தரமாகக் கைவிட்டால் அன்றி பேச்சு வார்த்தை நடத்தப் போவதில்லை என்று ஐரிஸ் குடியரசும் வலியுறுத்தியுள்ளது.

# சர்வதேச பாதுகாப்பு குழு இஸ்ரேல் அனுமதி

(டெல்அவிவ்)

ஹெப்ரோன் பள்ளிவாசல் படுகொலைச் சம்பவத்தைத் தொடர்ந்து இஸ்ரேல் சர்வதேச பாதுகாப்புக் குழுவின் வருகைக்கு அனுமதி அளித்துள்ளது பாலஸ்தீனர்களை அமைதிப்படுத்தும் அம்சமாகவே இஸ்ரேல் இதற்கான அனுமதியை வழங்கியுள்ளது.

இஸ்ரேல் சர்வதேச பாதுகாப்புக் குழுவுக்கு அனுமதி அளித்திருப்பது இது முதல் தடவை என நம்பப்படுகின்றது

# சபாநாயகர் கடிதத்திற்கு சென்னை நீதிமன்று தடை

(சென்னை)

முன்னாள் மாநில அமைச்சர் திரு.ஜி விஸ்வநாதன்மீது கட்சித்தாவல் தடைச்சட்டத்தின்கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று விளக்கம் கேட்டு மார்ச் மாதம் 19 ஆம் திகதி தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி முத்தையா அனுப்பியிருந்த கடிதத்தின்மீது மேல் நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளக்கூடாது என்று சென்னைநீதிமன்றம் இடைக்கால தடை விதித்துள்ளது.

திரு. ஜி விஸ்வநாதன் நீதிமன்றத்தில் தொடுத்திருந்த ரிட் மனுவை விசாரித்த நீதிபதி ஏ. கே கனகராஜ் இந்தத் தடை உத்தரவைப் பிறப்பித்தார். பேரவைத் தலைவர் பேரவைச் செயலாளர் மூலமாக இந்தக் கடிதத்தை விஸ்வநாதனுக்கு அனுப்பி ஏழு நாட்களுக்குள் இதற்குப் பதிலளிக்க வேண்டும் என்று கேட்டிருந்தார்.

முன்னாள் அமைச்சர்கள் திரு கே ராஜாராம், திரு அழகு திருநாவுக்கரசு ஆகியோருக்குஅனுப்பப்பட்ட இத்தகைய கடிதங்கள் மீதும் மேல் நடவடிக்கை எடுக்கக் கூடாதென்று உயர் நீதிமன்றம் கடந்த 25 ஆம் திகதி தடை உத்தரவு பிறப்பித்திருந்தது

## மாதாந்த உதவு தொகை கட்டத் தவறின்

# மகளிர் பொற்கணக்கு

# உச்சிக்கு நேரே சூரியன் வரும்

(எதிர் வரும் 7ஆம் 8ஆம்

கனடா, நோர்வே, மற்றும் மேற்கைரோப்பிய நாடுகளின் எடுத்த முயற்சிகள் கைகூடாமல் போகவேண்டி வந்தது.

இறுதியில் சிறிலங்கா பாராளுமன்றச் சபாநாயகர் முகமட்டின் யாழ் விஜயமும் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவினால் தடுத்து நிறுத்தப்பட்டது. அதாவது சமாதான முயற்சியில் ஈடுபட்ட மதஸ்தாபனங்கள் அரச சார்பற்ற நிறுவனங்கள் சென்ற தூரம் கூடச் செல்லாமல் சபாநாயகரின் விஜயம் அரசாங்கத்தால் முறிக்கப்பட்டது; அதாவது வெளிநாட்டு மத்தியஸ்த முயற்சிகள் நிறுத்தப்பட்டது போன்று முகமட்டின் விஜயமும் நிறுத்தப்பட்டது. ஆனால் ஒருவித்தியாசம், வெளிநாட்டு முயற்சிகள் அங்கிகாரம் வழங்காமலே நிறுத்தப்பட்டன. ஆனால் இது அங்கிகாரம் வழங்கி பின் நிறுத்தப்பட்டது

இவ்வாறான சிறிலங்கா அரசின் சமாதான விரோதப் போக்கையே இன்று உலகம் ஒரு கணம் நின்று அவதானித்துச் செல்லுமாறு கோருகின்றோம். இதன் மூலம் உலகத்தில் ஆதிக்கம் செலுத்தும சக்திகள் எவையாக இருப்பினும் அவை எமக்கு நேரடியாக உதவ வேண்டும் என்பதற்காக நாம் இதைத் தெரிவிக்கவில்லை, உலக ஆதிக்க சக்திகளாக இருப்பினும் சரி; ஏனைய உலக நாடுகளாக இருப்பினும் சரி, அவையாவும் தமது அரசு, தமது நலன் என்ற ரீதியிலேயே செயற்படுகின்றன என்பதும் மற்றவர்களின் துயர்களில் அவர்கள் லாபம் அடைய முற்படுபவை என்பவை எமக்குத் தெரியாதவை அல்ல, உலக வரலாறும் இன்றைய அரசியல் யதார்த்தமும் எமக்கு அதைப் போதிய அளவில் கற்றுத் தந்துள்ளன,

ஆனால் நாம் ஒரு கணம் அவதானித்துச் செல்லுமாறு கோருவது தமிழ்மக்களும் - விடுதலைப்புலிகளும் நியாய பூர்வமான தீர்வொன்றிற்குத் தயாராக இருக்கின்றார்கள் என்பதை அறிந்து கொண்டால் போதும் என்பதற்காகவே. ஏனெனில் சிறிலங்கா அரசாங்கம் இன்று மேற்கொண்டு வரும் முயற்சிகளும், அணுகுமுறைகளும் பெரும் யுத்தம் ஒன்றைத் தோற்றுவிக்கும் என்பதில் சந்தேகமில்லை, அவ்வாறு ஒரு யுத்தம் இடம்பெறுமானால் பெருமளவு உயிரிழப்பும், பொருள் இழப்பும் ஏற்படுவது தவிர்க்க முடியாது; சிலவேளை அதன் பின்னர் சிறிலங்கா அரசு சமாதானம், அரசியல் தீர்வு பற்றிப் பேசினால், அரசின் நிலைப்பாட்டிற்கு ஆதரவு தெரிவித்துக் கொண்டு தமிழ்மக்களிலும்- விடுதலைப் புலிகளிலும் குறை கூறக் கூடாது என்பதற்கே ஆகும்;

## சாதாரண சேமிப்பாகும்

(நல்லூர்)

இலங்கை வங்கி யாழ் கிளையில் தமது மகளிர் பொற்கணக்கில் சேமிப்புத் தொகையை வைப்பிலிடும் வாடிக்கையாளர்களில் மாதா மாதம் ஒழுங்காக தமது பணத்தை வைப்பிலிடத் தவறியோரின் மகளிர் பொற்கணக்கு உடனடியாக சாதாரண சேமிப்புக்கணக்கிற்கு மாற்றப்பட்டு வருவதாக இலங்கை வங்கி யாழ் கிளைதெரிவித்துள்ளது.

இவ்வாறு மாற்றப்பட்டு வரும் மகளிர் பொற்கணக்கு வாடிக்கையாளர்கள் தமது முன்னைய நன்மைகளையும் இழப்பார்கள் எனவும் இவர்கள் சாதாரண சேமிப்புக் கணக்கைப்போன்று நினைத்த நேரத்தில் பணத்தை வைப்பிலிடவோ அதனைத் திரும்பப்பெறவோ முடியும் எனவும் யாழ் கிளை மேலும் தெரிவித்துள்ளது,

இதேநேரத்தில் மகளிர் பொற்கணக்கு வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சேமிப்புக் கணக்குப் புத்தகத்தில்கூட குறிப்பிடப்பட்டுள்ள வங்கி விதிகளில் ''விதிகளையும் பிரமாணங்களையும் எந்தநேரத்திலும் மாற்றவோ புதிதாகச் சேர்க்கவோ வங்கிக்கு உரிமையுண்டு'' எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (17)

## பவள விழா



செந்தமிழ்ச்செல்வர் பண்டிதர் க. மயில்வாகனனாரின் தமிழ், சமய, சமூக சேவைகளைப் பாராட்டி வட்டுக்கோட்டைத் தொகுதி தமிழ்ச் சங்கம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணி முதல் வட்டுக்கோட்டை வீரபத்திரசிவன் கோவில் மேற்கு வீதியில் பவள விழா ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது. பண்டிதர் அ. ஆறுமுகம் இதற்குத் தலைமை தாங்குவார்.

## புலிகளின் குரல் வானொலி நிகழ்ச்சி நிரல்

சனி இரவு

08-01ற்கு - அன்னை பூபதி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி ''பூபதி விளைவித்த பூகம்பம்''

08 10ற்கு -அறிவியற் கலசம்

08-25ற்கு - நேயர் கடிதங்கள்

08-30ற்கு - செய்திகள்

08-40ற்கு - சித்திரம் ''கரும்புலி அமைப்பு''

ஃ ஃ ஃ

ஞாயிறு காலை

07-02ற்கு - மாவீர வணக்கம்

07-15ற்கு - அன்னை பூபதி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி ''உலகத் தமிழர்களை விழிக்கச் செய்த சாத்வீகத்தாய் அன்னை பூபதி''

07-25ற்கு - களத்தில் மலர்ந்தவை

07-45ற்கு - செய்திகள்

07-50ற்கு -பத்திரிகைச் செய்திகள்

07-55ற்கு - தாயகப்பாடல்

## சூரியன் வரும்

(எதிர் வரும் 7ஆம் 8ஆம் திகதிகளில் சூரியன் இலங்கைக்கு நேர் உச்சியில் இருக்கும் என்று வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது,

சூரிய கதிர்கள் அவ்விரு நாளும் செங்குத்தாக விழுவதால் வெப்பநிலை அதிகரித்து இருக்கும். மேலும் காற்றின் வலு பெருமளவு குறைந்து காணப்படும் இதனால் அடுத்த வாரம் வெப்ப நிலை கூடும் என கொழும்பு வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

## மீன் பிடியியல் கற்கை

யாழ் பல்கலைக்கழகப் புறநிலைப்படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் இம்மாதம் 09-ம் திகதிமீன்பிடியியலில் ஓர் அடிப்படைக் கற்கைநெறி ஆரம்பமாகின்றது; இருமாதம் இடம் பெறவுள்ள இக்கற்கைநெறி விரிவுரைகள், செய்முறைப் பயிற்சிகள், களப்பயிற்சிகளை உள்ளடக்கியதாகும். குடாநாட்டின் பல்வேறுபகுதிகளிலும் உள்ள கடற்றொழிலாளர் சங்கங்களைச் சார்ந்த பிரதிநிதிகள், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக அபிவிருத்திப் பணியாளர்கள், ஆர்வமுள்ள பொது மக்கள் ஆகிய 100 பேர்வரை மேற்படி கற்கைநெறியில் கலந்து பயன் பெறவுள்ளனர்;

ஃ ஃ ஃ

யாழ் பல்கலைக்கழகப் புறநிலைப்படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் இம் மாதம் 16 ஆம் திகதி (16-04-94) உணவகங்களின் முகாமைத்துவம் பற்றிய ஓர் அடிப்படைக் கற்கைநெறி ஆரம்பமாகவுள்ளது இரு மாத காலம் இடம்பெறவுள்ள இக்கற்கைநெறி விரிவுரைகள், செய்முறைப்பயிற்சிகள், களப்பயிற்சிகளை உள்ளடக்கியதாகும். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த உணவகங்களின் பிரதிநிதிகள் 100 பேர்வரை மேற்படி கற்கைநெறியில் பயின்று பயன்பெறவுள்ளனர்;

நந்த ரிட் மனுவை விசாரித்த ... தடை உத்தரவு பிறப்பித்திருந்தது

## தி. மு. க. பிரிவுகளுக்கு ஆதரவு வழங்குவதில்லை

### மாக்ஸிஸ்ட்கம்யூனிஸ்ட்

(சென்னை)

மயிலாப்பூர், பெருந்துறை சட்டப்பேரவை இடைத்தேர்தல்களில் தி. மு. க, தி. மு. க. கோபாலசாமி அணி ஆகியவற்றிற்கு ஆதரவு அளிப்பதில்லை என மாக்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி முடிவு எடுத்துள்ளது

இது குறித்து இக்கட்சியின் தஞ்சாவூர் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

இதன் மூலம் தி. மு. க. மாக்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகளிடையேயிருந்த 10 வருடகால உறவு உடைந்துள்ளது அத்துடன் இம்முடிவினால் தேசிய முன்னணியும் பிளவுபட்டுள்ளதாக கூறப்படுகிறது,

## ஆந்திர பஸ் விபத்து 10 பேர் ஸ்தலத்தில் பலி

(ஆந்திரா)

இந்திய ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் சுற்றுலா பேருந்தொன்று கட்டடம் ஒன்றின் மீது மோதியதில் அதில் பயணம் செய்து கொண்டிருந்தவர்களில் 10 பேர் இறந்தனர் 45 பேர் படுகாயமடைந்தனர் 6பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ் விபத்து பேருந்தின் தடுப்பு அறுந்த நிலையில் ஏற்பட்டதென இந்திய காவல் துறையினர் தெரிவித்துள்ளனர் இறந்தவர்களுள் 2 பெண்களும் 5 சிறுவர்களும் அடங்குவர் என மேலும் அச்செய்திகள் தெரிவிக்கின்றன.

## எயிட்ஸ் நோயாளருக்கு உதவ மருந்துக்கடை

(நியூயோர்க்)

எயிட்ஸினால் பீடிக்கப்பட்டிருப்பவர்களுக்கு மருந்துகளையும் சேவைகளையும் வழங்குவதற்கான முதலாவது மருந்துக்கடை ஒன்று நியூயோர்க்கில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது,

இது போன்றதோர் மருந்துக்கடை சென்ற வருடம் சன்பிரான்சிஸ்கோவில் திறந்து வைக்கப்பட்டது மேலும் எயிட்ஸ் வைரஸ் பற்றி பயிற்சி அளிக்கப்பட்டவர்களே இதில் பணியாற்றுவர். எயிட்ஸ் பற்றிய புதிய தகவல்களை அளித்தல், மருந்து மற்றும் சிகிச்சை அளித்தல் போன்றவற்றை இது வாடிக்கையாளர்களுக்கு வழங்கிவருகிறது,

எயிட்ஸினால் பீடிக்கப்பட்டவர்கள் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு எம்மை அணுகலாம் அவர்கள் கூறுவதை நாம் இரகசியமாக வைத்திருப்போம் என இம்மருந்துக் கடைகளின் தலைவர் எல்வி அடியேல் கூறினார்.

## யாழ்: பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசாவிற்கு மணிவிழா

இடம்:- கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்

காலம்:- யூன்மாதக் கடைசி வாரம்

தலைவர்:- வடமாநில முன்னாள் கல்விப்பணிப்பாளரும் பல்கலைக்கழக பேரவை உறுப்பினருமாகிய திரு. இரா. சுந்தரலிங்கம் அவர்கள்

பேராசிரியர் அ. துரைராசா மணி விழா நிதியம்

திரட்டப்படும் நிதி - 3,00,000 ரூபா

கீழ்வரும் ஒழுங்கின் பிரகாரம், கல்வி நிறுவனங்களுக்கு நிதி பகிர்ந்தளிக்கப்படவுள்ளது:

(1) உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி - 50, 000

(2) கொக்குவில் இந்துக் கல்லூரி 50, 000

(3) யாழ் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள மாணவர்களுக்கு கல்வி பயிலுவதற்கான நிதியுதவி

| | |
|---|---|
| கலைப்பீடம் - | 50, 000 |
| விஞ்ஞானபீடம் - | 50, 000 |
| மருத்துவபீடம் - | 50, 000 |
| விவசாயபீடம் - | 50, 000 |
| பொறியியல்பீடம்- | 50, 000 |

ரிக்கற் விபரம்:- 10,000, 5,000, 3,000 1,000

அனைவராலும் போற்றக் கூடிய மூதறிஞரும் பேரறிஞரும் ஆகிய எங்கள் தலைவருக்கு தேவையான நிதியுதவியினை தந்துதவி செய்து இந் நிதியத்தினைப் பெருக்குவதற்கு வர்த்தகப் பிரமுகர்கள், கல்விமான்கள், தமிழ் மக்கள், அனைவரும் ஒத்துழைப்பு நல்கும்படி விழாக்குழுவினர் மிகவும் பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றனர்.

சி8992 இங்ஙனம்

மணிவிழா குழுவினர்



உடுப்பிட்டி ப.நோ.கூ சங்கம் (வரையறுக்கப்பட்டது)

## உழவு இயந்திரமும் பெட்டியும் தேவை

எமது சங்கத்திற்கு உடன் பாவிப்புக்கு நல்ல நிலையில் உள்ள உழவு இயந்திரமும், பெட்டியும் தேவைப்படுகின்றது. விற்பனை செய்ய விரும்புவோர் வாகனத்தின் வர்க்கம், இனம், உற்பத்தி ஆண்டு, பதிவு இலக்கம், விலை, வழமையாக தரித்து நிற்கும் இடம் மற்றும் ஏனைய பூரண விபரங்களுடன் தமது கேள்விக் கூறை 10.04.94ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

உழவு இயந்திரம் தனியாகவும், பெட்டி தனியாகவும் வைத்திருப்பவர்களும் தனித்தனி தமது கேள்விக் கூறை மேற்குறிப்பிட்ட விபரங்களுடன் அனுப்பி வைக்கலாம்.

பொது முகாமையாளர்,
உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம்,
உடுப்பிட்டி.

(சி-8991)


## மரண அறிவித்தல்கள்

### நடராசா அன்பழகன்

கரவெட்டியைச் சேர்ந்த நடராசா அன்பழகன் 30 - 3 - 94 அன்று காலமாகிவிட்டார். இவர் நட

### ராணுவத்

றன

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் நீண்ட காலமாக நிவாரண, புனர்வாழ்வுப் பணிகளில் ஈடுபட்டுவரும் இந்த அரசசார்பற்ற நிறுவனம் திரு ஹமில்டன் வணசிங்காவின் மேற்படி முடிவைத் தொடர்ந்து தமது யாழ்ப்பாணத்துக்கான தமது நல்லெண்ண விஜயத்தைக் கைவிட்டுள்ளனர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன (க)

### அஷ்ரப்

தெரிவித்துள்ளார்.

இதே வேளை கல்முனையில் நடைபெறவுள்ள முஸ்லிம் காங்கிரசின் தேசிய மாநாட்டில் குமார் பொன்னம்பலம், சந்திரிகா குமாரணதுங்க, சிவசிதம்பரம், தொண்டமான் போன்றோரும் கலந்து கொள்ள இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### இந்தியாவிலிருந்து

தின் திட்டப்பணிப்பாளர் திரு. பரமகுலசிங்கம் யாழ். திட்டப்பணிப்பாளருக்கு எதுவித அறிவுறுத்தல்களையும் இதுவரை வழங்கவில்லை.

மீளக் குடியமர்த்தல் என்ற அடிப்படையில் தமது சொந்த இடங்களுக்கு திரும்பும் அகதிகளுக்கு சுமார் ஆறு மாத காலத்துக்கு உலர் உணவு நிவாரணமும் ஏனைய வசதிகளும் செய்து கொடுக்கப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் இருந்து நாடு திரும்பிய தமக்கு நிவாரணம் வழங்குவதற்கு வவுனியா செயலகமா? யாழ் செயலகமா பொறுப்பு? என்று நாடு திரும்பிய அகதிகள் பலர் கேட்கின்றனர். (க)

### நரோமா

படையினர் பறித்தனர், அப்போது கூட்டுப்படை அனுமதியுடனேயே இப்பொருள்களை எடுத்து வந்தோம் என்று கூறியபோது காங்கேசன்துறை கடற்படையினர் நீங்கள் எப்படி அனுமதி எடுத்திருப்பீர்கள் என்று எங்களுக்குத் தெரியும் எனக்கூறி பறித்த பொருள்களை தர மறுத்ததாக மேலும்தெரிவித்தனர். (யோ)

### இனப்பிரச்சினைக்கு

ற்குப் பதிலளித்த அமைச்சர் ஜோன் அமரதுங்க மனித உரிமை மீறல்களை தடுத்து நிறுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகத் தெரிவித்தார். வடக்கு கிழக்கு பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காண்பதில் அரசு திடமாக

### முஸ்லிம்

வகையில் ஜனாதிபதி உரை நிகழ்த்தி வந்ததாகவும், இதனால் இம் மக்களின் மனவேதனையை புலப்படுத்தும் வகையில் ஆளுமைக்குமாறாக அழைக்கப்படவில்லை எனவும் முஸ்லிம் காங்கிரசின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை இம் மாநாட்டில் மேல் மாகாண முதல்வரும், எதிர்க்கட்சிகளின் முன்னணிப் பிரமுகருமான திருமதி சந்திரிகா குமாரணதுங்க, உட்பட பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும், அமைச்சர் தொண்டமானும் பங்கேற்கவுள்ளனர். இம் மாநாட்டில் ஐ. தே. க பிரதிநிதிகளாக கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சிறிசேனகுரே, அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தயாரட்ண போன்றோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை இம் மாநாடு எதிர்காலத் தேர்தல்களுக்கு எதிர்க்கட்சிகள் கிழக்கில் ஆதரவு தேடுவதற்கு பயன்படும் எனவும்கருத படுகிறது.

### ஒருதொகுதி

சேர்ந்த இந்த அகதி மக்களில் ஒரு தொகுதியினர் கடந்த 26ஆம் திகதி யாழ் வந்து சேர்ந்தனர் என்பது தெரிந்ததே.

இரண்டாவது தொகுதி அகதி மக்களில் பதினைந்து குடும்பங்களைச் சேர்ந்த 52 பேர் அடங்குவர். இவர்கள் அனைவரும் யாழ். குருநகர் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்றுக் காலை 8.30மணியளவில் பருத்தித்துறை இறங்கு துறைக்கு வந்து சேர்ந்த இவர்களை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பொறுப்பெடுத்து உபசரித்தது எனவும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று மாலை இந்த அகதி மக்கள் அவரவர் வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்

இரு கட்டங்களாக 108 பேர் தற்போது வந்து சேர்ந்துள்ளனர் என்றும் கப்பலில் இடப் பற்றாக்குறை காரணமாக மிகுதி ஆறுபேர் திருக்கோணமலையில் தங்கியிருப்பதாகவும் அவர்கள் அடுத்த கப்பலில் யாழ் வந்து சேருவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, அகதி மக்களுடன் நேற்று கப்பலில் வந்த அகதிகளுக்கான ஐ. நா. தூதரக அதிகாரி திரு. றொட்ஸிலிப் தற்போது யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கின்றார்.

இவர் விமானம் மூலம் கொழும்பிற்கு திரும்பிச்செல்வதற்கான நடவடிக்கைகள்

## பாண் உண்ட ஐவர் மயக்கம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் தெற்கு பகுதியில் உள்ள தோட்டமொன்றில் வேலைசெய்துவிட்டு மதிய உணவாக பாண் சாப்பிட்ட எட்டுப்பேரில் ஐவர் வாந்தியெடுத்து மயக்கமுற்ற நிலையில் யாழ் போதனா மருத்துவமனைக்கு எடுத்து வரப்பட்டனர்.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது: கோவா தோட்டம் ஒன்றில் புல்லுப்பிடுங்கும் வேலையில் ஈடுபட்டிருந்த எட்டுப் பெண்கள் வேலையின் இடையில் தமக்கு மதிய உணவாக தோட்டச் சொந்தக்காரர் வழங்கிய பாணை உண்டபோது அவர்கள் வயிற்று வலிக்கு உட்பட்டதாகவும் சிலர் கோவா பாத்தியிலும் மற்றவர்கள் வரம்பிலும் வாந்தியெடுத்தபடி மயங்கி விழுந்து விட்டதாகவும் தெரிய வருகின்றது.

இச் சம்பவத்தின் போது தவராசா சுபாஜினி (வயது 18), சின்னத்தம்பி சுமதி, வயது 20), விஜிதா (வயது (16), குமுதினி (வயது 15) சரசு (வயது 72) ஆகியோரே மயக்கமுற்றவர்களாவர்.

## ஊர்காவற்படை புறக்கணிப்பு

பொலிஸ் திணைக்களங்களில் பணிபுரியும் ஊர்காவற்படையினர் அத்திணைக்களங்கள் அடிமைகள் போல் நடத்தப்படுவதாக முறையிடப்பட்டுள்ளது. இவர்கள் பொதுவாக எட்டு மணிநேரம் பணிபுரிய அட்டவணையிடப்பட்ட போதிலும் சில சந்தர்ப்பங்களில் 24 மணிநேரமும் சேவை செய்யப்பணிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

### வடக்கு கிழக்கு

வீடுகள், குடும்ப அங்கத்தினர் தொகை ஆகிய வழமையான கேள்விகள் இக் கேள்விக் கொத்தில் இடம்பெறுகின்றன.

### விசாகா

களைப் பெற்றுள்ளனர். இதில் றோயல் கல்லூரியில் எட்டுப் பாடங்களிலும் அதிவிசேட சித்திகளைப் பெற்ற மாணவர்களில் மூவர் தமிழ்மொழி மூலம் தோற்றியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது,

இதேவேளை யாழ். மாவட்ட பரீட்சார்த்திகளுக்கான பெறுபேறுகள் விமான மூலம் பலாலிக்கு அனுப்பி வைக்கப்படும் எனவும் அங்கிருந்து அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று அதனைப் பொறுப்பேற்று பாடசாலைகளுக்கு நேரடியாக ஒப்படைக்குமென பரீட்சைத் திணைக்கள இரா

## கால்களின்றிப் பிறந்த அதிசயக் குழந்தை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு அரசினர் போதனா வைத்தியசாலையில் பெண்மணி ஒருவர் அதிசயிக்கத்தக்க குழந்தையொன்றை சென்ற வாரத்தில் பிரசவித்துள்ளார்

சுமார் இரண்டு கிலோ எடையுடைய இக் குழந்தை இரண்டு கால்களும் இல்லாத நிலையிலும் பிறப்பு உறுப்புக்கள் எதுவும் இல்லாத நிலையிலும் காணப்படுகிறது எனினும் கால் போன்ற நீண்ட அங்கம் ஒன்று காணப்படுகிறது

இக் குழந்தை அழும் சமயங்களில் கைகளையும், வாயையும் ஆட்டி ஆட்டி அழுவதாகவும் கூறப்படுகிறது.

இக் குழந்தை ஆரோக்கியமாக இருப்பதாகவும், மேலதிக சிகிச்சைக்காகவும், ஆய்வுக்காகவும் கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

சவுதியில் பிரேத அறையில்

## ஒரு வருடமாக கிடக்கும் பெண்ணின் சடலம்

(கொழும்பு)

சவுதியில் பணிப் பெண்ணாக வேலை செய்த சிறிலங்காப் பெண்ணின் சடலம் பிரேத அறையில் ஒருவருட காலமாக வைக்கப்பட்டுள்ளது.

மேபல் லான்சா(40 வயது) என்ற பெண் சென்ற ஏப்பிரல் 15ஆம் திகதி சவுதி அரேபியாவில் தற்கொலை செய்து கொண்டார் என்று உறவினருக்கு அறிவிக்கப்பட்டது இந்தப் பெண்ணை சவுதிக்கு அனுப்பிய முகவர் சில ஆவணங்களை அங்கு அனுப்பாததாலேயே சடலம் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாம்.

அதேவேளை இறந்தவரின் கணவர் லீயோ பெர்னாண்டோவும், மூன்று பிள்ளைகளும் சடலத்தை எதிர்பார்த்து அடிக்கடி கட்டுநாயக்கா விமான நிலையம் வந்து போவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இறந்தவரின் சடலத்தை ஏற்றுக் கோயில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யவே இவர்கள் விமான நிலையத்திற்கு வந்து போகிறார்கள்.


## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

நவிண்டில் கலைமதி சனசமூக நிலையத்தினரால் 1993- 01- 14 அன்று அதிர்ஷ்டம் பார்க்க இருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்.

| | |
|---|---|
| 1-ம் பரிசு | 1358 |
| 2-ம் பரிசு | 9031 |
| 3-ம் பரிசு | 598 |

ஆறுதல் பரிசுகள்

3120, 2115, 5310, 1492, 1280, 5235, 1458, 5018, 3114, 1005.

தலைவர்

நவிண்டில் கலைமதி சனசமூக நிலையம்

(7916)



## யாழ் ஸ்ரீதர் திரையில்

உயிர்த்த ஞாயிறை முன்னிட்டு

நடராசா அம்பழகன்

கரவெட்டியைச் சேர்ந்த நடராசா அம்பழகன் 30 - 3 - 94 அன்று காலமாகிவிட்டார். இவர் நடராசா (R.M.P மகோ), கலைவாணி ஆகியோரின் அன்பு மகனும், அன்பரசன், அன்புமதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், விமலராஜா (பொலிஸ் உத்தியோகத்தர்) ஆகியோரின் பெறா மகனும், குணசேகரம், (லங்கா சீமென் லிமிட்டட்), தவமணி ஆகியோரின் மருமகனும், மெனலிராஜ், அருந்தஜாவின் மைத்துனரும், காலஞ்சென்ற கனகர், செல்லாச்சி, காலஞ்சென்ற திருமதி கனகரத்தினம், மயில்வாகனம் ஆகியோரின் அன்புப்பேரனும், திருமதி வசந்தா அரியரத்தினம் (சுவிஸ்). இசைவாணி ஆகியோரின் பெறாமகனும் சித்தஜாவின் ஒன்றுவிட்ட சகோதரரும் ஆவார். இவரின் இறுதிக்கிரியைகள் 02-4-94 இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெற்று சோனப்பு மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புதுறோட், கரவெட்டி மேற்கு, கரவெட்டி. (7920)

தகவல்: குணசேகரம் மாமா (சுருளி)

## திரு. நடராசா சுப்பிரமணியம்

(நெடுந்திவு கிழக்கு)

நெடுந்திவு கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது பாலபண்ணைவீதி திருநெல்வேலியை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய திரு. நடராசா சுப்பிரமணியம் 31-03-94 இல் காலமானார். இவர் காலம்சென்ற தெய்வானையின் அன்புக் கணவரும், தங்கரத்தினம், சிவநாயகமூர்த்தி (முன்னைநாள் கல்வி அதிகாரி, கண்டி), கமலாம்பிகை, பராசக்தி (ஆசிரியை கிளிநொச்சி மகா வித்தியாலயம்), அன்னபூரணி (தாதி, வவுனியா அரசினர் வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வராசா, தனலெட்சுமி, பாலசிங்கம் (கிராம சேவகர் வவுனியா), சண்முகம் (விவசாய போதனாசிரியர் கிளிநொச்சி), சச்சிதானந்தம் (கச்சேரி கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் தகனக்கிரியைகள் 01-04-94 இல் கோண்டாவில் இந்து மயானத்தில் நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோருக்கு அறியத் தருகின்றோம்.

123, பாலபண்ணை வீதி, திருநெல்வேலி. (7921)

தகவல்: செல்வராசா

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

...னைக்கு அரசியல் தீர்வு காணப்பதில் அரசு திடமாக இருப்பதாகவும் அவர் கூறினார்.

இவ்விமானம் மூலம் கொழும்பிற்கு திரும்பிச்செல்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

...பெற்று பட்டதாரிகளுக்கு நேரடியாக ஒப்படைக்குமென பரீட்சைத் திணைக்கள சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.


வடமராட்சி மக்களிற்கு...

ஓர் அரிய சந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்!

எதிர்வரும் புத்தாண்டை முன்னிட்டு...

எழினி புடவை வாணிபத்தினரின்

மாபெரும் மலிவு விற்பனை!

சிவன்கோவில் அருகாமை பிரதான வீதி, பருத்தித்துறை.

03-4-94 -- 04-4-94 வரை

20% தொடக்கம்- 50% வரை விலை கழிவுகள் உண்டு!

வியாபாரிகளிற்கும் தையல் நிலையத்தினருக்கும் விசேட கழிவுகள் உண்டு!

சிறியோர் முதல் பெரியோர் வரை
ஆடவர், பெண்கள் அனைவர்க்கும்
வேண்டிய உடைகள்! துணிவகைகள்!
கதவு, யன்னல், திரைகளிற்கு ஏற்ற துணிவகைகள்!

உங்கள் தெரிவிற்கு முந்துங்கள்!

இடம்:- எழினி புடவை வாணிபம், பெரியகடை, யாழ்ப்பாணம்.

(சி-8988)



உயிர்த்த ஞாயிறை முன்னிட்டு
நாளை ஞாயிறு (03-04-94) மட்டும்
மு. ப. 10.30, பி. ப. 2.30, மாலை 6.00 மணி காட்சிகளாக-

ராஜேஷ், சரிதா நடித்த

குழந்தை ஏசு

(கலர்)

காண்பிக்கப்படும்

திங்கள் (4-4-94) முதல்

THE KUNG FU KIDS

(சி-8993)


## மரண அறிவித்தல்

### முத்துச்சாமி இராசரத்தினம்

சிறுப்பிட்டி மத்தியில் வசித்தவரும் வலி- கிழக்கு பிரதேச சபையின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தருமாகிய திரு. முத்துச்சாமி இராசரத்தினம் நேற்று இரவு சிவபதம் அடைந்து விட்டார். அன்னார் சுகிர்தாம்பாளின் அன்புக் கணவரும், தயாளன் (U K), சத்தியசீலன் (ஆசிரியர்), ஜெயசீலன் (U K), நந்தினி, சாந்தினி, சுகந்தினி ஆகியோரின் அன்புத்தந்தையும், மங்களேஸ்வரி, உமாதேவி, இராஜேந்திரம் (சுழிபுரம் பிரதேசசபை) ஆகியோரின் மாமனும் நிரோசன், சுஜீ, சுஜன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதி கிரியைகள் 1994-04-02ஆம் திகதி இன்று சனிக்கிழமை மாலை 3 00 மணிக்கு சிறுப்பிட்டி இல்லத்தில் நடைபெற்று புத்தூர் மேற்கு சித்திட்டி மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெறும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: திருமதி இராசரத்தினமும் பிள்ளைகளும்

(இ)